www.padippakam.com

# ஆறாவது உலகத்தமிழ் ஆராய்ச்சி மாநாடு



படிப்பகம்

www.padippakam.com

THOONDIL
Südasien Büro
Große Heimstr. 58
4600 Dortmund 1

# மலேசியத் தமிழ்ச் சிறுகதைகளில் சமுதாயப் பிரதிபலிப்புக்கள் ஒரு பார்வை!

ரெ. கார்த்திகேசு, பினாங்கு.
மலேசியா

ஆயிரத்து தொளாயிரத்து ஐம்பத்து ஏழாம் ஆண்டிற்குப் பின் எழுந்த எழுத் தோவியங்களிலும் கூட மலேசியத் தமிழர்களின் மலேசிய மக்களின் வாழ்க்கையைப் படம் பிடித் துக் காட்டுபவை மிகச் சிலவே ஆகும். ஆனால், இந்நிலை மாறி வருகின்றது. இன்றைய எழுத் தாளர்கள் நம் நாட்டு நிலையை, படைக்கத் தொடங்கியுள்ளனர்.

[டாக்டர் இராம சுப்பையா (1968), மணிக்கதைகள்)

இந்த நாட்டில் நமக்குள்ள பொருளாதாரப் பிரச்சினைகள், சமுதாயப் பிரச்சினைகள், அரசியல் பிரச்சினைகள் ஆகிய யாவும் நாம் எழுதும் கதைகளுக்கும் கவிதைகளுக்கும் நாடகங்களுக்கும் கருவாக அமைய வேண்டும்.

(ரெ. கார்த்திகேசு (1974), பவுன் பரிசுக் கதைகள்)

இம்மண்ணின் மணம் நமது படைப்புக்களில் நிரந்தரமாகத் திகழவேண்டும். நமது இனத்தின் வரலாறும் வாழ்க்கை முறைகளும் அவற்றில் பிரதிபலிக்க வேண்டும்.

[சிறுகதைத் தொகுப்பு (1986), பேரவைக் கதைகள்]

மலேசியாவில் எழுதப்படும் தமிழ் இலக் கியப் படைப்புக்கள் இந்த நாட்டுத் தமிழர் சமுதாயத்தினைப் பிரதிபலிப்பவையாக இருக்க வேண்டும் என்பதனைத் திறனாய்வாளர்கள் தொடர்ந்து வலியுறுத்தி வந்திருக்கின்றார்கள். அந்த நோக்கம் நமது சிறுகதைகளைப் பொறுத்த வரை எந்த அளவுக்கு வெற்றிகரமாக நிறை வேற்றப்பட்டிருக்கின்றது என்பதனை அவ்வப்போது நின்று, திரும்பிப்பார்த்து ஆராய வேண்டியது அவசியமாகும்.

அந்த ஆராய்ச்சியில் ஒருபடியாக அண்மை யில் வெளியான இரண்டு சிறுகதைத் தொகுப் புக்களில் அடங்கியுள்ள சிறு கதைகளை நாம் கண்ணோட்டமிடலாம். இவை மலாயாப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை 1986இல் வெளியிட்ட பேரவைக் கதைகள் என்னும் தொகுப்பும், மலே சியத் தமிழ் எழுத்தாளர் சங்கம்/தமிழ் எழுத் தாளர் புத்தகப் பண்ணை 1987இல் வெளியிட்ட புதையல் என்னும் தொகுப்பும் ஆகும். பேரவைக் கதைகளில் 12 எழுத்தாளர்கள் எழுதிய 12 கதைகளும், புதையலில் 23 எழுத்தாளர்கள் எழுதிய 24 கதைகளும் உள்ளன. இவை இந்த நாட்டு எழுத்தாளர்களையும், அவர்களின் எழுத்துத்திறன்/ தன்மை ஆகியவற்றையும் பரவலாகப் பிரதிபலிக் கும் தொகுப்புக்கள் என்று கொள்ளலாம். எல்



படிப்பகம்

www.padippakam.com

லாக் கதைகளும் திறனாய்வு செய்யப்பட்டுத் தேர்ந்தெடுத்த கதைகள். ஆதலால் இவை இந்நாட்டுச் சிறுகதைப் படைப்புக்களில் சிறந்தவை என்று கொள்வதிலும் தவறில்லை. இவை அண்மைக்கால வெளியீடுகள் ஆதலால் நிகழ்காலச் சிறுகதை இலக்கியத் தன்மைகளைச் சித்தரிப்பவை என்பதும் ஏற்றுக் கொள்ளத்தக்கதே.

இக்கதைகளை எழுதிய எழுத்தாளர்களின் பால் பகுப்புப் பின் வருமாறு: (பே – பேரவைக் கதைகள்; பு – புதையல்)

| | பே.க. | பு | மொத்தம் |
|---|---|---|---|
| | 9 | 13 | 11* |
| பெண்கள் | 3 | 10 | 13 |
| மொத்தம் | 12 | 23** | 34* |

* ஒரே எழுத்தாளர் இரண்டு தொகுப்புகளிலும் இடம் பெற்றுள்ளார்.

** ஒரே எழுத்தாளர் இரண்டு கதைகள் எழுதியுள்ளார்.

இந்த எழுத்தாளர்களின் வசிப்பிடங்கள் பின்வருமாறு [தொகுப்புக்களில் கொடுக்கப்பட்டுள்ள எழுத்தாளர்கள் குறிப்பின்படி]

| | பே.க. | பு | மொத்தம் |
|---|---|---|---|
| தோட்டம் | 1 | — | 1 (2.9%) |
| நகரம் | 8 | 23 | 30* (88.2% |
| (தெரியாதது) | 3 | — | 3 (8.82%) |
| மொத்தம் | 12 | 23 | 34* (1.0%) |

[* ஒரே எழுத்தாளர் இரண்டு தொகுப்புகளிலும் இடம் பெற்றிருக்கிறார்.]

மலேசிய இந்தியர்களில் (இது தமிழர்களுக்கு ஏறத்தாழப் பொருந்தும்). 45% தோட்டங்களிலும் 55% நகரங்களிலும் வாழ்வதாக அண்மைய கணக்கெடுப்புகள் காட்டுகின்றன. (உதாரணம்: ஐந்தாம் மலேசியத் திட்டம்). ஆனால் நமது எழுத்தாளர்களின் பின்னணிகள் இதைப் பிரதிபலிக்கவில்லை. கிட்டத்தட்ட 90% எழுத்தாளர்கள் நகர்ப்புற வாசிகளாக இருக்கின்றனர். நகர்ப்புற வாழ்க்கையைப் பற்றி அனுபவபூர்வமாகப் பேச இவர்களுக்கு உள்ள தகுதி, தோட்டப்புற வாழ்க்கையைப் பற்றிப் பேசுவதில் இருக்குமா என்பது கேள்விக்குரியது.

இவர்கள் எழுதிய கதைகளின் நிலைக்களன்களும் ஏறக்குறைய இந்தக் குறைபாட்டை வலியுறுத்துவனவாகவே இருக்கின்றன.

கதைகளின் நிலைக்களன்கள் பின்வருமாறு:

| | பே.க. | பு | மொத்தம் |
|---|---|---|---|
| தோட்டம் | 3 | 5 | 8 (22.22%) |
| நகரம் | 6 | 19 | 25 (69.44%) |
| தோட்டம்/நகரம் | 3 | — | 3 (8.33%) |
| மொத்தம் | 12 | 24 | 36 (100%) |

தோட்டப்புற வாழ்க்கையின் இன்ப துன்ப உணர்வுகளைப் பற்றிப் பேசுகின்ற கதைகள் வெகுவாகக் குறைந்துவிட்டன என்பது தெளிவு. இதற்கு ஒரு காரணம் இந்த நாட்டுத் தமிழர் சமுதாயத்தின் வாழ்க்கை முறைகள் மாறுபடுவதும், இருப்பிட மாற்றம் (migration) அதிகரித்து வருவதுமே ஆகும்.

இந்தக் கதைகளைப் பொறுத்தவரை நகரம் என்பது பெரும்பாலும் நகர ஒதுக்குப் புறங்களையே குறிக்கிறது எனலாம். நகரத்தின் செழிப்பை அனுபவித்து வாழும் வாழ்க்கையை இக்கதைகள் அதிகமாகச் சித்தரிக்கவில்லை. நகர ஒதுக்குப்புறங்களில் உள்ள வறுமை வாழ்வையே அவை அதிகம் பேசுகின்றன.

தோட்டம்/நகரம் என்ற பகுதியில் தமிழ் மக்கள், குறிப்பாகத் தமிழ் இளைஞர்கள் தோட்டத்தை விட்டு வெளியேறி நகர்ப்புறங்களில் குடிபுகுவதே அதிகம் பேசப்படுகின்றது.

www.padippakam.com

இனி இந்தக் கதைகளில் உள்ள கதை மாந்தர்களின் தொழில்கள் வாழ்க்கைச் சூழ்நிலைகள் வருமாறு:

| | கதை மாந்தர்களின் தொழில்கள்/ வாழ்க்கைச் சூழ்நிலைகள் | பே.க. | | பு | | மொத்தம் | |
|---|---|---|---|---|---|---|---|
| | | ஆண் | பெண் | ஆண் | பெண் | ஆண் | பெண் |
| 1. | தோட்டப்புற உடலுழைப்புத் தொழில் | 3 | 2 | 4 | 2 | 7 | 4 |
| 2. | தோட்டப்புற மேலாளர்/அரசாங்க குமாஸ்தா/ | 4 | 1 | 1 | 3 | 5 | 4 |
| 3. | நிபுணத்துவத்துறைத் தொழில்கள் (டாக்டர், இன்ஜினியர்) | 1 | – | 3 | – | 4 | – |
| 4. | பள்ளி ஆசிரியர்கள், தலைமை ஆசிரியர்கள் | 3 | 1 | 4 | 4 | 7 | 5 |
| 5. | மாணவர்கள் (பள்ளி, பல்கலைக்கழகம்) | 4 | 2 | 3 | 4 | 7 | 6 |
| 6. | சிறு தொழில் செய்வோர் | 2 | 1 | 2 | 3 | 4 | 4 |
| 7. | நிறுவன முதலாளிகள்/ பெருவணிகர்கள் | 2 | – | 2 | – | 4 | – |
| 8. | வேலை இல்லாதோர்/ குடும்பத் தலைவியர் (முழு நேர ஊதியம் இல்லாதோர்) | 1 | 4 | 2 | 15 | 3 | 19 |
| 9. | மற்ற (தெளிவாகத் தெரியாத) வேலைகள் | 3 | 1 | 10 | 13 | 13 | 14 |
| | மொத்தம் | 23 | 12 | 31 | 44 | 54 | 56 |

கூடிய மொத்தமாக 110 பாத்திரங்கள் இந்தக் கதைகளில் உள்ளன. இதில் ஆண்களும் பெண்களும் கிட்டத்தட்ட சரிபாதியாக உள்ளனர். இவர்களுடைய தொழில்/வேலைகள் பிரிவுகளைப் பார்த்தால் சில வேறுபாடுகள் தெளிவாகின்றன. வேலை இல்லாதோர் பிரிவில் முழு நேர வேலைபார்க்காத, ஊதியம் பெறாத பெண்கள் ஆண்களைவிட மிக அதிகமாக இருக்கிறார்கள். (19:3) நிபுணத்துவத் தொழில்களிலும், நிறுவன முதலாளிகள் பிரிவிலும் பெண்கள் இல்லை. பள்ளி ஆசிரியர் பிரிவிலும் (7:5), மாணவர் பிரிவிலும் (7:6) சிறுதொழில் பிரிவிலும் (4:4) கிட்டத்தட்ட சமமாக உள்ளனர். மொத்தக் கதாமாந்தர்களில் வேலை இல்லாமல் இருப்போர் (22), ஆக அதிகமாகவும், மாணவர்கள் (13) இரண்டாம் நிலையிலும் ஆசிரியர்கள் (12) மூன்றாம் நிலையிலும், தோட்டப்புற உடலுழைப்புத் தொழிலாளர்கள் (11) நான்காம் நிலையிலும் உள்ளனர்.

பாத்திரப் படைப்புக்களின் எண்ணிக்கைகள் தமிழ்ச் சமுதாயத்தின் நிலைமையை ஓரளவே சரியாகப் பிரதிபலிக்கின்றன என்று கூறவேண்டும். எண்ணிக்கையைப் பொறுத்த வரையில் தோட்டப்புற உடலுழைப்புத் தொழிலாளர்கள் பற்றிய பிரதிபலிப்பு குறைவாக இருக்கிறது; இதற்கு எழுத்தாளர்களின் வாழ்க்கைப் பின்னணி (முன்பு குறிப்பிட்டதுபோல்) ஒரு காரணமாக இருக்கலாம் . நகர்ப்புற உடலுழைப்புத் தொழிலாளர்கள் (நகரசுத்தித் தொழிலாளர்கள், மின்சார வாரியம், பொதுப் பணித்துறை ஊழியர்கள் போன்றோர்) முற்றாகப் பிரதிபலிக்கப் படாதது பெருங்குறை ஆகும்.

கதைமாந்தர்களிற் வாழ்க்கைச் சூழ்நிலைகளுக்கப்பால், இந்தக கதைகளின் மொத்தச் சிந்தனைகள் யாரைப் பற்றியனவாக இருக்கின்றன என்ற கேள்வியோடு சிலவற்றை அணுகினால் பின்வரும். விடைகள் கிடைக்கின்றன.



படிப்பகம்

www.padippakam.com

| | பே.க. | பு | மொத்தம் |
|---|---|---|---|
| தமிழர் தனிமனிதர் | 2 | 3 | 5 (13.88%) |
| தமிழர் குடும்பம் | 2 | 13 | 15 (41.67%) |
| தமிழர் இனம் | 8 | 7 | 15 (41.67%) |
| மலேசிய நாடு | | 1 | 1 (2.86%) |
| மொத்தம் | 12 | 24 | 36 (100%) |

தமிழர்களின் குடும்ப வாழ்வு பற்றியும், இனத்தின் நிலைமைபற்றியுமே இக்கதைகளில் பெரும்பாலானவை (84%) பேசக் காண்கிறோம். தனி மனிதர்களின் மன உணர்வுகள் சில கதைகளிலேயே பேசப்படுகின்றன. தனி மனித உணர்வுகள் இவ்வளவு குறைவாக இந்தத் தொகுப்புக் கதைகளில் பிரதிபலிக்கப்பட்டிருப்பதற்கு, இக் கதைகள் தேர்ந்தெடுக்கப்படப் பயன்பட்ட திறனாய்வு அடிப்படைகள் ஒரு காரணமாக இருக்கலாம். திறனாய்வாளர்கள் இனச் சிந்தனைக்கும், குடும்பச் சிந்தனைக்குமே அதிக மதிப்புக் கொடுக்கிறார்கள் என்பது திறனாய்வுக் கட்டுரைகளைப் படிப்பதிலிருந்து தெரிகிறது. குடும்பச் சிந்தனை என்பதும் இன முன்னேற்றத்திற்கான அடிப்படைகளில் ஒன்று என்றே கொள்ளப்பட வேண்டும் தனி மனிதச் சிந்தனைகளில் உள்ள தனிப்போக்கு அதிகமாகத் திறனாய்வாளர்களால் பாராட்டப்படுவதில்லை என்று தோன்றுகிறது.

மலேசிய நாட்டையும் நாட்டுச் சேவையையும் முதல் பொருளாக வைத்து எழுதப்பட்ட கதைகள் கிட்டத்தட்ட இல்லை என்றே சொல்லலாம். இதில் குறிப்பிடப்படும் ஒரே கதை ஒரு ராணுவ வீரனையும் அவனை அந்தச் சேவைக்கு அனுப்பித் தியாகம் செய்யும் தாயையும் பற்றியது ஆகும்.

எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட இந்தக் கண்ணோட்டம் கதைகளின் வெளித்தன்மைகளைக் காட்டுவதே அன்றிக் கதைகளின் உள் அடக்கங்களையும், நுணுக்கங்களையும், தரங்களையும் அடையாளம் காட்ட உதவாது. அதற்குக் கதையின் உட்பொருள்களைத் தனித்தனியே எடுத்து இலக்கிய மதிப்பீடுகளைப் பயன்படுத்திச் செயல்படுகின்ற ஆய்வே உதவும். அந்த ஆய்வு இந்தக் கட்டுரைக்கு அப்பாற்பட்டது.

ஆனால் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்ட இந்த ஆய்வு, எழுத்தாளர்களின் சிந்தனைகளைப் பாதிக்கின்ற புறச் சூழ்நிலைகளையும் அந்தப்புறச் சூழ்நிலைகள் அவர்களின் கதைகளின் உள்ளடக்கங்களை எவ்வாறு பாதிக்கின்றன என்பதையும் புரிந்து கொள்ள உதவும்.

புறச்சூழ்நிலைகள் பற்றிய எண்ணிக்கை ஆய்வும், உள்ளடக்கம் பற்றிய இலக்கிய ஆய்வும் நம்நாட்டு இலக்கியத்தின் வளர்ச்சிக்கு சில புதிய அடிப்படைகளை எடுத்துக் கொடுக்க உதவலாம் என்பது என் நம்பிக்கை.

இது ஓர் ஆரம்பச் சிந்தனைதான். இத் துறையில் ஈடுபாடு உள்ளோர் இதுபற்றி இன்னும் ஆழச் சிந்திக்க இதை ஒரு தொடக்கமாகவே எடுத்துக் கொள்ள வேண்டும்.


1. பேரவைக் கதைகள் (1986), தமிழ்ப்பேரவை, மலாயாப் பல்கலைக் கழகம், கோலாலம்பூர்.
2. புதையல் (1987), தமிழ் எழுத்தாளர் புத்தகப்பண்ணை, கோலாலம்பூர்.
3. மணிக் கதைகள் (1968), தமிழ் இளைஞர் மணிமன்றம், கோலாலம்பூர்.
4. பவுன் பரிசுக் கதைகள் (1974), தமிழ் நேசன் கோலாலம்பூர்.
5. மா. இராமையா, மலேசிய தமிழ் இலக்கிய வரலாறு (1978), புரட்சிப் பண்ணை சேலம்.




படிப்பகம்

www.padippakam.com



# மலேசியாவின் முதல் துப்பறியும் தமிழ் நாவல்!

வே. சபாபதி, கிளாங்.

இந்நூற்றாண்டு ஓர் உரைநடை யுகமாகும். எங்கும் எதிலும் உரைநடையே பயன்படுத்தப் படுகின்றது. ஒரு காலத்தில் செய்யுள்களுக்கு இருந்த சிறப்பு அருகி இன்று உரைநடையே மிகவும் செல்வாக்குப் பெற்றுத் திகழ்கின்றது. இந்நூற்றாண்டு இலக்கியத்தின் பெரும் பகுதி உரைநடைப் படைப்புக்களே என்பதிலிருந்து உரைநடையின் சிறப்பு எத்தகையது என்பதனை உணரலாம்.

உரைநடையின் கால வளர்ச்சியில் நாவல், சிறுகதை போன்ற இலக்கியக் குழந்தைகள் பிறந்தன. அவற்றுள் நாவலே தலைக்குழந்தையாகும். இன்று மக்களிடையே செல்வாக்கோடு இருப்பது நாவலே. ஏனெனில் எண்ணங்களையும் கற்பனையையும் வெளியிடக் கிடைத்திருக்கும் சிறப்பு ஒப்பற்ற சாதனம் இதுவே. எனவே நாவல் உரைநடைக் காப்பியம் எனக் கருதப்படுகின்றது.

## தமிழில் நாவல் இலக்கியம்

நாவல் இலக்கியம் மேனாட்டில் பதினெட்டாம் நூற்றாண்டிலேயே தோன்றிவிட்டது. ஆயினும் தமிழில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தோன்றியது. மாயூரம் முன்சீப் வேதநாயகம் பிள்ளை எழுதிய "பிரதாப முதலியார் சரித்திரமே" தமிழில் முதல் நாவலாகும். இது 1876ஆம் ஆண்டில் வெளியானது. அவருக்குப் பின் ராஜமையர், மாதவையா போன்றோர் தமிழ் நாவல் இலக்கியக் குழந்தையை வளர்த்துவிட்ட சான்றோர்கள் ஆவர்.

## மலேசியாவில் தமிழ் நாவல்கள்

தமிழகத்தைத் தவிர்த்து வெளியே தமிழ் வழங்கும் நாடுகளுள் மலேசியாவும் ஒன்றாகும். பல நாடுகளில் இன்று தமிழ் வழங்கும் நிலை காணப்பட்டாலும் தமக்கெனத் தனித்தமிழ் இலக்கிய வரலாற்றைக் கொண்ட நாடுகளாக இலங்கை, மலேசியா, சிங்கப்பூர் ஆகியவை காணப்படுகின்றன.

மலேசியாவில் சென்ற நூற்றாண்டின் இறுதியிலேயே தமிழில் இலக்கிய முயற்சிகள் தோன்றிவிட்டன. இருப்பினும் தமிழில் நாவல் இலக்கியம் இந்நூற்றாண்டின் தொடக்கத்தில்தான் தோன்றியது. வெங்கடரத்தினம் என்பவர் எழுதிய "கருணா சாகரன் அல்லது காதலின் மாட்சி" என்ற நாவலே



படிப்பகம்

இதுவரை கிடைத்துள்ள குறிப்புகளின்படி முதல் மலேசியத் தமிழ் நாவலாகக் கருதப்படுகின்றது. இது 1917-ஆம் ஆண்டில் வெளியானது. இந்நாவல் தென்னிந்தியாவின் ஜமீந்தார் குடும்பத்தில் நிகழ்ந்த ஒரு முக்கோணக் காதல் கதையை விவரிக்கின்றது.

## முதல் துப்பறியும் நாவல்-

எனினும் மலேசியத் தமிழ் நாவல் இலக்கிய வளர்ச்சியில் முதல் துப்பறியும் நாவல் என்ற சிறப்பு "தோட்டக்கொலை மர்மம் அல்லது பத்துமலைக் கள்வன்" என்ற நாவலையே சாரும். இந்நாவல் கோ. பார்த்தசாரதி என்பவரால் 1932-இல் தமிழ் நேசன் நாளிதழில் தொடர் கதையாக எழுதப்பட்டது. இவர் அப்பொழுது தமிழ் நேசன் நாளிதழின் உதவி ஆசிரியராகப் பணி புரிந்தார். அப்பொழுது தமிழ் நேசனின் ஆசிரியராயிருந்த திரு. கி. நரசிம்ம ஐயங்காரின் மைத்துனர் ஆவார். இவர் இந்நாவலை 1932-ஆம் ஆண்டு மே மாதம் 11ஆம் தேதி முதல் 1932ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 3ஆம் தேதி வரையில் தொடர்கதையாக எழுதினர். மலேசியாவில் தமிழில் தோன்றிய முதல் துப்பறியும் தொடர்கதையும் இதுவே.

## பெயர்

இந்நாவலின் பெயரைப் பார்த்த அளவிலேயே, இஃது ஒரு துப்பறியும் நாவல் என்றும் தமிழகத்தில் எழுதப்பட்ட சில நாவல்களைப் பின்பற்றி எழுதப்பட்டது என்றும் புரிந்து கொள்ளலாம். நூலின் முகப்பிலேயே இது "ஒரு ருசிகரமான, நூதனத் துப்பறியும் நாவல்" என்றே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்நாவலாசிரியருக்குள்ள தமிழகத்துத் தாக்கத்தினுல் இந்நாவல் இரட்டைப் பெயருடன் விளங்குகின்றது. சென்ற நூற்றுண்டின் இறுதியிலேயே நாவல்களுக்கு இரட்டைப்பெயர் சூட்டுகின்ற சூழ்நிலை தமிழகத்தில் உருவானது. 1896-ஆம் ஆண்டில் வெளியான "ஆபத்துக்கிடமான அபவாதம் அல்லது கமலாம்பாள் சரித்திரம்" என்ற நாவலே இரட்டைப் பெயர்களுடன் தமிழில் வெளியான முதல் நாவலாகும். இந்த நூற்றுண்டின் முதல் முப்பது ஆண்டுகளில் வெளியான பெரும்பாலான நாவல்களின் பெயர்களில் இந்த நிலையைக் காணலாம். இவ்வாறு இரட்டைப் பெயர்கள் மிகவும் புகழ் பெற்று விளங்கிய காலப்பகுதியில் எழுதப்பட்டதால் இந்நாவலும் இரட்டைப் பெயர்களைக் கொண்டு விளங்குகின்றது.

## துப்பறியும் போக்கு

இந்நாவலாசிரியர் தமிழகத்தைச் சேர்ந்தவர். தமிழகத்தில் பிறந்து வளர்ந்து, பட்டப்படிப்புவை பயின்று பிறகு தொழில் நிமித்தம் இந்நாட்டிற் வந்தவர். எனவே இவர் தமிழகத்திலேயே நாவ இலக்கியத்தையும், அன்றையத் தமிழக நாவல்களி போக்குகளையும் அறிந்தவர் எனலாம். ஆக, தமிழக தாக்கமே இவரை இங்கு நாவல் எழுதத் தூண் யது எனலாம். அதிலும் தமிழகத்தில் அன்று மக் ளிடையே மிகவும் செல்வாக்குப் பெற்றிருந் துப்பறியும் போக்கினையே தம் நாவலுக்கு இவ பயன்படுத்தியுள்ளார். முதல் உலகப் போருக்கு முன் தமிழில் எழுதப்பட்ட பெரும்பாலான நாவல்கள் ஆங்கில நாவல்களைத் தழுவியும், அவைகளின் பாணி யிலும் எழுதப்பட்டுள்ளன. இதன் விளைவா அக்காலப் பகுதியில் பல மர்ம, துப்பறியும் நாவல் கள் தோன்றின. இந்நாவல்கள் தமிழக மக்களால் பெரிதும் விரும்பிப் படிக்கப்பட்டன. இதனுல் 1920ஆம் ஆண்டையொட்டிய பத்தாண்டு காலத்தில் இத்தகைய நாவல்கள் எழுதப்பட்டன. தமிழகத்தில் இவ்வாறு தமிழில் துப்பறியும் நாவல்கள் பெருகத் தொடங்கி, உச்சக் கட்டத்தை எட்டிக் கொண்டி ருந்த வேளையில்தான் இந்நாட்டில் தமிழ் நாவல்கள் தோன்றித் தளிர்நடை போட்டு மெல்ல வளரத் தொடங்கின. எனவே, தமிழகத்தில் காணப்படும் துப்பறியும் கருப்பொருள், இரட்டைப் பெயர் ஆகிய இயல்புகள் இந்நாவலில் காணப்படுவதில் வியப்பொன்றும் இல்லை.

## நோக்கம்

வாசகர்களை மகிழ்வித்து அவர்கட்குப் பொழுது போக்குச் சுவை நல்குவதே இந்நாவலைப் படைப்பதில் ஆசிரியருக்குள்ள தலையாய நோக்கம். அக்காலப் பகுதியில் மலேசிய இந்தியர்கள் இந்திய இலக்கியப் படைப்புக்களையே பெரிதும் விரும்பிப் படித்தனர். அச்சமயத்தில் மிகவும் பரவலாயிருந்த துப்பறியும் நாவல்களில் அதிக ஈடுபாடு காட்டி வந்தனர். எனவே அவர்களின் ரசனைக்கு ஏற்ப தம் நாவலைத் துப்பறியும் நாவலாகவே படைத்துள்ளார்.

தொடர்கதையாக வெளிவந்தாலும் துப்பறியும் நாவல்களுக்கே உரிய இயல்புகள் சிறப்புடன் இதில் கையாளப்பட்டுள்ளது. பொதுவாகவே துப்பறியும் நாவல்களில் இயல்புகளாகக் காணப்படும் திடுக்கிடும் சம்பவங்களுடன் படைக்கப்பட்டுள்ளது. இதற்குத் தொடர்கதை அமைப்பு முறை எவ்வகையிலும் ஊறு விளைவிக்கவில்லை. மாறாக மேற்கூறிய இயல்புகள் சிறப்புடன் அமையத் தொடர்கதை அமைப்பு முறை பெரிதும் உதவியுள்ளது எனலாம். இஃது வாசகர்களிடையே விறுவிறுப்பையும் எதிர்பார்ப்பு நிலையையும் உருவாக்குகின்றது.

அக்காலப் பகுதியில் டி.எஸ்.டி. சாமி என்பவர்

எழுதிய "கருங்குயில் குன்றத்துக்கொலை" என்ற நாவல் தமிழக வாசகர்களிடையே பெரும் பர பரப்பை ஏற்படுத்தியது. மூன்று பாகங்கள் கொண்ட இந்நாவலை ரசிகர்கள் தேடியலைந்து படித்தது ஐம்பது ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் நாட்டில் காணப்பட்ட ஒரு நிகழ்ச்சியாகும். இந் நாவலின் தாக்கமே இந்நாவலாசிரியரை அதே பாணியிலான "தோட்டக்கொலை மர்மம்" என்ற நாவலை எழுதத் தூண்டியிருக்கலாம் என எண்ணத் தோன்றுகிறது.

## கதை நிகழ்ச்சிகள்

பொதுவாக மர்ம நாவல்களில் மர்மங்கள் தோன்றும். கதையின் இறுதியில் கதைமாந்தர் களில் ஒருவருடைய முயற்சியால் அம்மர்மமானது தெளிவடையும். அதுபோன்றே துப்பறியும் நாவல் களில் ஒரு கொலை, திருட்டு போன்ற குற்றங்கள் இழைத்தவர்களை ஒரு தனி மனிதன் தன்னுடைய சாமர்த்தியத்தால் துப்புத்துலக்கிக் கண்டுபிடிப்பது தான் கருப்பொருள். கதையில் வரும் சிக்கல்கள், மர்மங்கள் போன்ற திருப்பங்களைத் துப்பறிபவன் விளக்குவதுடன் கதை முடிவு பெறும். இதே பாணி யிலான கதையமைப்பு முறையே இந்நாவலில் பின் பற்றப்பட்டுள்ளது.

பொதுவாக, துப்பறி நாவல்களில் வசதி படைத்த குடும்பங்களின் பிரச்னைகளே கையாளப் பட்டன. பண வசதி நிறைந்த குடும்பங்களில் பெரும்பாலும் சூது, சதி, வஞ்சம் போன்ற தீய நடத்தைகளுக்கு வாய்ப்புகள் அதிகமாயிருந்தன. அதற்கொப்பவே இந்நாவலின் கதை நிகழ்ச்சிகளும் பணக்காரக் கிராணியாரைப் பற்றியும் ஜமீந்தார் ஒருவரைப் பற்றியும் சுற்றிப் படர்ந்துள்ளன.

பொன்னம்பலம் என்ற கிராணியார் கோலா லும்பூருக்கு அருகிலே அமைந்துள்ள பத்துமலையில் யில் சகல வசதிகளும் கூடிய தோட்டம் அமைத்து வாழ்ந்து வருகிறார். தனக்குப் பிடித்தவர்களை மட்டுமே அத்தோட்டத்து வீடுகளில் வாடகைக் குக் குடியிருக்க அனுமதிக்கின்றார். உண்மையில் கிராணியார் பெரும் கொலைகாரனும், கொள்ளைக் காரனும் ஆவார். அவர் தன் கும்பலுடன் பலரைக் கொலை செய்து அவர்களின் சொத்துகளைக் கவர்ந்து பணக்காரர் ஆகிறார். ஒரு முறை ரெங்க நாத முதலியார் எனும் தென்னிந்திய ஜமீந்தாரைப் பிணையாகப் பிடித்து வைத்து அவருடைய திரண்ட சொத்துக்களை அடையத் திட்டம் தீட்டுகின்றார். ஜமீந்தாரைத் தேடி அவருடைய தமையனுர் மகள் குணவல்லி தமிழகத்திலிருந்து மலாயா வர, அவ ளுக்குப் பிரபல துப்பறியும் நிபுணர் நியூட்டன் உதவுகிறார். அவர் அது பற்றித் துப்பறிந்து தேடி அலைந்து பிடித்துக் கொடியவர்களை ஒழிப்பது பற்றியதே கதை.

மேலோட்டமாகக் காணும் போது கதையில் முழுமை தெரிகின்றது. கதையில் தெரியும் முழுமை கதை நிகழ்ச்சிகளாகப் பின்னப்பட்ட பின்னலிலும் தெரிகின்றது. தொடக்ககால மலேசியத் தமிழ் நாவல்களில் கதைப் பின்னல் சிறந்து விளங்கும் நாவ லாக இது உள்ளது. கதைப் பின்னலுக்குத் தேவை யற்ற நிகழ்ச்சிகள் எவையும் இதில் இடம்பெறவில்லை. இஃது இந்நாவலின் கதைப் பின்னலுக்கு ஏற்ற பலத்தையும் இறுக்கத்தையும் தந்து சிறப்படையச் செய்துள்ளது. கதை நிகழ்ச்சிகளில் இயைபுபட்ட தன்மை, நிகழ்ச்சியமைப்பில் திருப்பு மையங்கள் கொண்ட தன்மை ஆகியவற்றைக் காண முடிகின்றது. அதே வேளையில் கதை நிகழ்ச்சிகள் இயற்கையாக வும் நடப்பியலுக்கு முரணாகாமலும் பின்னப்பட் டிருப்பதையும் காண முடிகின்றது. பொன்னம்பலக் கிராணியார், துப்பறியும் நிபுணர் நியூட்டன், குண வல்லி போன்றோர் தொடர்புபட்ட கதை நிகழ்ச்சி களை இதற்கு உதாரணங்களாகக் கூறலாம்.

இந்நாவலின் கதை வருணனையோடு தொடங்கு கின்றது. "கோலாலும்பூருக்கு சுமார் எட்டு மைல் வடக்கே பத்துமலை என்னும் குன்றொன்றிருக்கிறது. மிகப் பெரிய குகைகள் அதிலுண்டு......." (பக்-1) என்று தொடங்கி சுமார் ஒன்றரை பக்க அளவில் பத்துமலைத் தோட்டத்தின் அமைப்பும் அழகும் வரு ணிக்கப்படுகின்றது. இருப்பினும் கதை முழுவதும் நிகழ்ச்சிகளாகவே காட்டப்பட்டுள்ளது. இஃது துப்பறியும் போக்கு கொண்ட இந்நாவலுக்கு ஏற்ற விறுவிறுப்பையும் ஆர்வ நிலையினையும் படிக்கும் வாசகர்களுக்கு தோற்றுவிக்கின்றது எனலாம். தோற்றுவிக்கப்பட்ட விறுவிறுப்பும் ஆர்வ நிலை யும் இறுதிவரை காக்கப்பட்டுள்ளதானது இந் நாவலுக்குச் சிறப்பைச் சேர்க்கின்றது.

அறம் வெல்லும், பாவம் தோற்றுத் தண்டனை யையும் என்ற இந்நாவலின் கருப்பொருளை விளக் கும் வகையிலேயே அனைத்துக் கதை நிகழ்ச்சிகளும் படைக்கப்பட்டுள்ளன. துன்மார்க்கம் உடனடியாக நன்மை தருவது போலத் தோன்றினாலும் இறுதியில் யில் தோற்று, தண்டனைக்கு ஆளாகும் என்பது பொன்னம்பலக் கிராணியார் மூலம் நன்கு விளக்கிக் காட்டப்பட்டுள்ளது.

துப்பறியும் நாவல்களில் காணப்படும் அம்சங் களுள் ஆர்வ நிலையும் ஒன்றாகும். அஃது நாவலாசிரி யரால் நாவல் முழுவதும் சிறப்பாகப் பயன்படுத்தப் பட்டுள்ளது. இஃது கதையைச் சுவையோடு கொண்டு செல்லப் பெரிதும் உதவுகின்றது. உதாரணமாக,

கதையில் நிகழும் கொலைகளைச் செய்தவன் யார்? குணவல்லியை யாருமறியாது பின்தொடரும் ஆசாமி யார்? ஜமீந்தாரின் சொத்துக்களுக்கு உரிமை கொண்டாடிக் கொண்டு திடீரென்று தோன்றும் ராமச்சந்திரன் யார்? போன்றவை ஆர்வ நிலையோடு காட்டிச் செல்லப்பட்டுள்ளன. அன்றியும் ஒவ்வொரு அத்தியாயத்திற்கும் இடப்பட்டுள்ள - தலைப்புகள் வாசகர்களின் ஆர்வத்தைத் தூண்டும் வகையில் அமைந்துள்ளன. கொலை செய்தது யார்? (பக். 1), விபரீதக் கடிதம் (ப. 5), கறுப்பு சலூன் மோட்டாரின் இரகசியம் (ப. 8), நள்ளிரவில் நடந்த சம்பவம் (பக். 23), குணவல்லியைக் காணோம் (பக். 51) போன்ற தலைப்புகள் துப்பறியும் நாவல்களுக்கே உரிய வகையில் இடப்பட்டுள்ளன. அதுபோன்றே ஒவ்வொரு அத்தியாய இறுதியும் விறுவிறுப்போடு முடிக்கப்பட்டுள்ளது. "குண்டு நடுநெற்றியில் பாய்ந்திருந்தது. நெற்றியில் வெடி மருந்துக்கரியும் கொஞ்சமிருந்தது. டாக்டரைத் தேட வேண்டிய அவசியம் இல்லை. கூட்டைவிட்டு ஆவி பிரிந்து விட்டது." (பக். 25) இது போன்ற அத்தியாய முடிவுகள் நாவலில் காணப்படுகின்றன. இவை வாசகர்கள் அடுத்த அத்தியாயத்தை ஆவலுடன் எதிர்பார்க்கும் நிலையினை ஏற்படுத்துகின்றன எனலாம். இவையனைத்தும் இந்நாவலுக்குரிய கட்டுக்கோப்பைத் தருவதில் துணை நிற்கின்றன.

## கதை மாந்தர்

தொடக்ககாலத் தமிழ் நாவல்களில் கதை மாந்தர்கள் முழுவதும் நல்லவர்கள், தீயவர்கள் என்ற பாகுபாட்டு முறையில் படைக்கப்பட்டிருப்பர். அந்நாவல்களின் தாக்கமே இந்நாவலாசிரியரையும் அவ்வகையில் கதைமாந்தர்களைப் படைக்கத் தூண்டியுள்ளது எனலாம். இதில் வரும் பொன்னம்பலக் கிராணியார் மிகக் கொடியவராகக் காட்டப்படுகின்றார். இறுதிவரை தன் போக்கில் மாறாமல் ஒரு நிலைக் கதைமாந்தராகவே திகழுகின்றார். அதே போன்று துப்பறியும் நிபுணர் நியூட்டன், குணவல்லி போன்றோர் முழுவதும் மிகச் சிறந்தவர்களாகவே படைக்கப்பட்டுள்ளனர்.

குற்றமற்ற கதைத்தலைவன், கதைத்தலைவி, கொலைகார வில்லன், கொடுமை செய்யும் பெற்றோர் அடக்கி ஆர்ப்பரிக்கும் கொள்ளைக் கூட்டம், சளசள வென்று பேசுகின்ற வேலைக்காரர்கள் ஆகியோர் இந்நாவல்கள் அனைத்திலும் காணப்படும் மாந்தர்கள் என்று அமரர் டாக்டர் இரா. தண்டாயுதம் கூறுவதற்கொப்பவே இந்நாவலில் கதைமாந்தர்கள் படைக்கப்பட்டுள்ளனர்.

இக்கதைமாந்தர்கள் பெரும் பகுதி தங்களுடைய செயல்களின் மூலமே உருவாக்கப்பட்டுள்ளனர். இவர்கள் சாதாரண வாழ்க்கையில் காணப்படுபவர்களை ஒத்தே உள்ளார்கள். இருப்பினும் இக்கதைமாந்தர்கள் போதிய வளர்ச்சி இன்றியே காணப்படுகிறார்கள். எனினும் இவர்கள் கதை ஓட்டத்திற்கும் வளர்ச்சிக்கும் பெரிதும் உதவுகிறார்கள்.

## ஆசிரியர் குறுக்கீடு

தொடக்ககாலத் தமிழ் நாவல்களில் சாதாரணமாகக் காணப்படும் ஆசிரியர் குறுக்கீடானது இந் நாவலில் ஒரே ஒரு இடத்தைத் தவிர வேறெங்கும் இடம் பெறவில்லை. பொதுவாகவே ஆசிரியர் குறுக்கீடு வாசகர்களின் சுவையைக் குறைத்துச் சலிப்பூட்டுவதுடன் கதை வளர்ச்சியையும் தடைப்படுத்துகின்றது. ஆனால் இந்நாவலில் காணக் கிடக்கும் ஆசிரியர் குறுக்கீடும் வாசகர்களுக்குச் சலிப்பூட்டுவதற்குப் பதிலாகக் கதையில் மேலும் ஒன்றிச் செல்ல உதவுகின்றது எனலாம்.

> "27ம் நம்பர் வீட்டுக்குள் புகுந்தவனே ராமச்சந்திர முதலியென்ற பெயருடையவனென்பதை நாம் சொல்லாமலே வாசகர்கள் ஊகித்துக் கொள்ளலாம்." (ப. 45)

இக்காலப் பகுதியில் தோன்றிய துப்பறியும் நாவல்களில் வாசகர்களை மகிழ்விப்பதற்காக நாவலாசிரியர்கள் தேவையற்ற, தரமற்ற அனைத்தையும் பயன்படுத்தினர். ஆனால் இந்நாவலில் தேவையற்ற வருணனைகள், கிளைக்கதைகள், அறவுரைகள் போன்றவை சிறிதும் காணப்படவில்லை. தேவையற்ற வருணனைகள், கிளைக்கதைகள், அறஉரைகள் துப்பறியும் நாவல்களில் விறுவிறுப்பையும் ஆர்வ நிலையினையும் குறைத்துவிடும் எனலாம். மாறாக இந்நாவல் தொடர்கதைக்கு வேண்டிய விறுவிறுப்பும், மேலும் படிக்க ஆவலைத் தூண்டும் பாங்கும், நிகழ்ச்சிக் கோர்வையும் பெற்றே அமைந்துள்ளன. இஃது இந் நாவலுக்குத் தனிச் சிறப்பைச் சேர்க்கின்றது.

## சமகால நிகழ்ச்சிகள்

இந்தக் கதைக்கு ஆசிரியர் தேர்ந்தெடுத்துள்ள காலப்பகுதி இந்நூற்றாண்டின் முற்பகுதி ஆகும். குறிப்பாக இந்நூற்றாண்டு ஆண்டுகள் இருபதுகளும் முப்பதுகளும் ஆகும். இதனை நாவலாசிரியர் கதைப் போக்கில் ஓரிடத்தில் குறிப்பிட்டுள்ளார்.

> "1902-ல் மோசடிக்காக 5 வருடம். பொய்க் கையெழுத்துச் செய்ததற்காக 1909ல் 6 வருடம். 1920ல் பத்து ஆறுங் கொள்ளைக்கேசில் சம்பந்தப்பட்டதாகச் சந்தேகிக்கப்பட்டது. ஆனால் போதிய ருஜுவில்லாததால் விடப்

www.padippakam.com

பட்டது. அதற்குப் பின் போனவிடம் தெரிய வில்லை. (பக். 41)

இந்நாவலில் சமகாலச் சம்பவங்கள் இடம் பெறுவதனல் அன்றைய சமுதாய வரலாற்றை அறிய முடிகிறது. இந்நூற்றுண்டின் ஆண்டுகள் இருபது களிலும் முப்பதுகளிலும் இந்நாட்டின் பொருளா தாரம் மிகவும் வீழ்ச்சி கண்டிருந்தது. முக்கிய விளை பொருட்களான ரப்பர், ஈயம் ஆகியவைகளின் விலை மோசமாக வீழ்ச்சி கண்டிருந்தது. அதனல் வியா பாரம் பெருமளவிற்குச் சரிந்தது. இச் செய்திகள் கதைப்போக்கில் காட்டப்பட்டுள்ளன.

இந்நாவலாசிரியர் வடமொழிச் சொற்களும், ஆங்கிலச் சொற்களும் கலந்த ஒரு மொழி நடை யினையே பயன்படுத்தியுள்ளார். உரையாடல்கள் இனிய நடையில் எளிமையாகப் புரிந்துகொள்ளும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன: கதைமாந்தர்களின் பேச்சுகள் அன்றாட வாழ்வில் கேட்கும் பேச்சுகளாகவே அமைந் துள்ளன. இஃது இந்நாவலுக்கு நடப்பியல் தன்மை யைத் தருகின்றது என்லாம்.

துப்பறியும் நாவலான இது தழுவல் முறை யில் அமைந்திருந்தாலும் இந்நாட்டின் சூழ்நிலையை நிலைக்களமாகக் கொண்டிருந்தமையால் அன்றைய சமுதாயத்தில் சில அம்சங்களை அறிய முடிகின் றது. சமகாலச் சம்பவங்களும் இடம் பெறுவதனல் அன்றைய சமுதாய வரலாற்றை அறிய முடிவதோடு இந்நாவல் மலேசியத் தன்மையினையும் பெற்றுள் ளது. தொடக்ககால மலேசியத் தமிழ் நாவல்களி லேயே இந்நாவல் ஒன்றில்தான் சிறந்த முறையில் கதையமைப்பு, கதைப்பின்னல், கட்டுக்கோப்பு ஆகியவற்றைக் காண முடிகின்றது. அந்த வகையில் இந்த நாவல், மலேசியத் தமிழ் நாவல் இலக்கியத் திற்குச் சிறப்பைச் சேர்க்கின்றது எனலாம்.




படிப்பகம்

www.padippakam.com

# மலேசியத் தமிழ்ப் பத்திரிகை உலகில் சங்கமணி - ஓர் ஆய்வு

எம். கிருஷ்ணன், கோலாலம்பூர்.

மலேசியத் தமிழ்ப்பத்திரிகை உலகம் "உலக நேசன்" 28-3-1987ல் வெளிவந்ததிலிருந்து தொடங்குகின்றது. இதனைத் தொடர்ந்து "சிங்கை நேசன்" 27-6-1987ல் தோன்றியது. இவையிரண்டும் பத்திரிகைகளாக இருந்தும் வாரம் ஒரு முறை வரும் வார இதழ்களாகவே வெளிவந்தன. பின்னர் "இந்து நேசன்" பத்திரிகை மாதமிருமுறை வெளிவந்தது. இம்மூன்றும் இப்பொழுது ஆய்வுக்குக் கிடைத்த போதிலும், இவற்றையே முதல் பத்திரிகைகளாகக் கொள்ளல் கூடாது என்று கருத்துரைத்துள்ளார் டாக்டர் இரா. தண்டாயுதம். இதற்கு முக்கியக் காரணமாக அவர், நேசன் உரிமையாளர் சி. கு. மகுதுரம் சாயபுவின் கூற்றைக் காட்டுகிறார். "முந்த 1875இல் இவ்வூருக்கு முதலாக "சிங்கை வர்த்தமானி" என்ற பத்திரிகை நாம் வெளியிட்டும் கொஞ்சகாலத்தில் நின்றது. பின் "தங்கை நேசன்", மூன்றுவதாக "ஞான சூரியன்". இப்போது இது. இனி வேறு பத்திரிகை விட யார் புறப்படப் போகிறார்களோ?" இச்செய்தியிலிருந்து, மலேசியாவில் வெளிவந்த முதல் தமிழ்ப் பத்திரிகை "சிங்கை வர்த்தமானி" என்று அறிய முடிகின்றது. இதற்கிடையே மலேசியாவில் முதன் முதலாக மலாயப் பத்திரிகையை வெளியிட்டவரும் இந்தியர் என்ற உண்மையையும் அறிய முடிகின்றது. "ஜாவி பெரானக்கான்" என்ற பத்திரிகையை இந்திய சமூகத்தைச் சேர்ந்த முன்ஷி முகமட் சயிட் பின் டாடா மொயிடின் என்பவர் 1876இல் சிங்கப்பூரில் வெளியிட்டிருக்கின்றார். இப்பத்திரிகை சுமார் இருபது வருடங்களுக்குத் தொடர்ந்து வெளிவந்திருக்கின்றது. மேலும் மலேசியாவில் சீனப் பத்திரிகைகள் வெளியிடவும் இந்தியர்கள் முயன்றிருப்பதை, சென் மொாங் ஹொக்கின் சீனப் பத்திரிகைகளைப் பற்றிய ஆய்வின் மூலம் காண முடிகின்றது. 1897இல் கோலாலம்பூரில் "நன்யாங் சீ வூ பாவ்" என்ற பத்திரிகையை இந்தியர் ஒருவர் வெளியிட்டிருக்கின்றார். ஆனால் இப் பத்திரிகை தொடங்கிய ஒரு மாதத்திலேயே வெளியீடு நிறுத்தப்பட்டிருக்கின்றது.

தொடர்ந்து,

1905இல் ஈப்போவிலிருந்து "வர்த்தமானன்",
1907இல் சிங்கப்பூரிலிருந்து "விஜயன்",
1912அல் பினாங்கிலிருந்து "ஞான சூரியன்"
1914இல் "ஜனோபகாரி"
1915இல் "மகா யுத்த சமாசார பத்திரிகை"
1919இல் "சத்தியவான்", "பாதுகாவலன்" ஆகிய பத்திரிகைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. மேலும்
1920களில் "பொதுஜன மித்திரன்" (1923)
"சிந்தாமணி" (1924)
"கலியுக நண்பன்" (1928)



படிப்பகம்

www.padippakam.com

"முன்னேற்றம்" (1929)

ஆகிய சிறந்த பத்திரிகைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இக்காலக்கட்டத்தில்தான் இன்று உலகத் தமிழ்ப் பத்திரிகைகளிலேயே மூத்தவற்றுள் ஒன்றாகவும், இடையிலே நிற்காமல் தொடர்ந்து வெளியிடப்பட்டு வரும் "தமிழ் நேசன்" (1924) தோன்றியது. இது முதலில் வார இதழாக இருந்தாலும் 1937 இலிருந்து நாளிதழாக வெளிவரத் துவங்கியது.

மேலும் 1930களில் "பொனிக்ஸ் கெஜட்" (193†
"தமிழன்" (1931)
"மலாயா தூதன்" (1932)
"மலாயா மித்திரன்" (1932)
"ஜனவர்த்தமானி" (1932)
"நவநீதம்" (1933)
"தேச நேசன்" (1933)
"பாரதமித்திரன்" (1934)
"தமிழ்ச்செல்வன்" (1934)
"இன்ப நிலையம்" (1934)
"மலாய் மணி" (1935)
"சமுதாய ஊழியன்" (1936)
"சமரசம்" (1936)
"நூருல் இஸ்லாம்" (1936)
"தேசாபிமானி" (1937)
"புதுயுகம்" (1937)
"திராவிட கேசரி" (1937)
"தமிழ் முரசு" (1937)
"பாரத நேசன்" (1939)
"ஜன்ம பூமி" (1939)

ஆகிய பத்திரிகைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன. இவற்றில் "தமிழ் முரசு" மிகக் குறைந்த விலையான ஒரு காசு விலையில் அக்காலக்கட்டத்தில் விற்கப்பட்டது. மேலும் தமிழ் முரசு சமுதாய நலனில் அக்கறை கொண்ட பத்திரிகையாகத் திகழ்ந்து பல சமூகப் பிரச்சினைகளுக்கு முன்னின்று தீர்வும் கண்டிருக்கின்றது. தொடர்ந்து, 1940களிலும் 1950களிலும்

"செந்தமிழ்ச் செல்வி" (1941)
"சுதந்திர இந்தியா" (1942)
"சந்திரோதயம்" (1942)
"யுவபாரதம்" (1942)
"ஜெயமணி" (1941)
"ஜனநாயகம்" (1945)
"நவயுகம்" (1946)
"முயற்சி" (1948)
"மலாயா நண்பன்" (1942)
"சேவிகா" (1944)
"ஜனோபகாரி" (1949)
"களஞ்சியம்" (1950)
"நாகரீகம்" (1951)
"சங்கமணி" (1952)
"ஜோதி" (1954)
"திருமுகம்" (1955)
"மாதவி" (1959)

என்ற பத்திரிகைகள் தோன்றி வெளிவந்திருக்கின்றன. இவற்றுள் 1952இல் தோன்றிய சங்கமணி முற்றிலும் தோட்டத் தொழிலாளர்களுக்கென்றே தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தால் தொடங்கப்பட்ட பத்திரிகையாகும். உலகிலேயே வாரம் இருமுறை வெளிவரும் தமிழ்ப் பத்திரிகையாகத் திகழ்வது சங்கமணி ஒன்றுதான் என்பது குறிப்பிடத்தக்கது. மேலும் 1960களிலும் 1970களிலும் "சமநீதி", "பொன்னி", "சக்தி", "வானம்பாடி" போன்ற பத்திரிகைகள் தோன்றி வெளிவந்தன. பின்னர் 1981இல் "தினமணி" மற்றும் "தமிழ் ஓசை" என்ற நாளிதழ்கள் தொடங்கப்பட்டு 1924இல் தோன்றிய தமிழ் நேசனோடு பத்திரிகை உலகில் பவனி வரத் தொடங்கின.

இந்நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்து தோற்றம் கண்டு வெளிவந்து கொண்டிருந்த பத்திரிகைகள் பெருமளவில் இடையிலேயே நின்று போய்விட்டன. அவற்றுள் இன்றும் தொடர்ந்து வெளிவந்து கொண்டிருப்பவை 1924ல் தோன்றிய "தமிழ் நேசனும்", 1952ல் தோன்றிய "சங்கமணியும்" மட்டுமே. இவையிரண்டில் "தமிழ் நேசன்" பொதுவான எல்லாவிதமான விஷயங்களையும் எடுத்துக் கூறும் பத்திரிகையாக விளங்குவதுடன், தனித்தன்மை கொண்ட மிக நீண்ட வரலாற்றினைக் கொண்டிருக்கின்றது. ஆனால் "சங்கமணி" இந்நாட்டுத் தமிழர்களிலே பெரும்பகுதியினரான தோட்டப்புறத் தமிழ்ச் சமுதாயத்தின் இதயக் குரலாக விளங்கும் வண்ணம் முற்றிலும் மாறுபட்ட வரலாற்றினைப் பெற்றிருக்கின்றது. வியாபார நோக்கமில்லாமல் தொழிற்சங்க அங்கத்தினர்களுக்காகவே நடத்தப்படுகின்ற ஒரு பத்திரிகையாக "சங்கமணி" விளங்குகின்றது. தொழிற்சங்கத்தைச் சார்ந்ததொரு பத்திரிகையாக இது விளங்கினாலும் மலேசியத் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்கு இது மிகச் சிறந்த முறையில் உறுதுணையாக விளங்கியிருப்பது மறுக்க முடியாத உண்மையாகும். முப்பது ஆண்டுகளுக்கும் மேலான வரலாற்றினைப் பெற்றிருக்கும் சங்கமணி தொழிற்சங்கச் செய்திகளுடன் இலக்கியங்களையும் வெளியிட்டு இந்நாட்டில் தமிழ் இலக்கியப் படைப்புகள் பெருகப் பணியாற்றி வருகின்றது என்பது கண்கூடான ஒன்று. மேலும் தோட்டப்புற மக்களின் பிரச்சினைகளை அலசி ஆராய்வதற்கும், தொழிற்சங்கத்தின் நடவடிக்கைகளை வெளிப்படுத்துவதற்கும் உரிய களமாகவும் மற்றும் தோட்டப்புறச் சமுதாயத்தின் குரலாகவும் சங்கமணி விளங்கி வருகின்றது.

சங்கமணி, தேசியத் தோட்டத் தொழிலாளர்

சங்கத்தின் பிரசார ஏடாகத் துவங்கப்பட்டிருப்பினும், அதன் வாசகர்களான தோட்டப்புறச் சமுதாயத்திற்கு இலக்கிய விருந்து படைக்கும் வண்ணம் பல்வேறு செய்திகளையும் தாங்கி வரும் பல்சுவைப் பத்திரிகையாகவே வெளி வருகின்றது. இதற்கு முக்கியக் காரணம், தொழிற்சங்கத்தைச் சார்ந்தவர்கள் சங்கமணியின் அதிகாரப்பூர்வ ஆசிரியர்களாக மட்டுமே பொறுப்பேற்றுக் கொண்டு படைப்பிலக்கிய வாதிகளையே சங்கமணியின் பொறுப்பாசிரியர்களாகப் பணிபுரியச் செய்தனர். இதன்வழி, சங்கமணியின் முதல் பொறுப்பாசிரியராக அமர்ந்தவர் ஆதி. நாகப்பன். இவர் தமிழ் நேசனில் பணியாற்றிக் கொண்டே சங்கமணியின் வெளியீட்டையும் கவனித்துக் கொண்டார். இவரைத் தொடர்ந்து மலேசிய வானொலியின் இந்தியப் பகுதியைச் சேர்ந்த தி. சு. சண்முகம் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். இவருக்குப் பிறகு, சிறந்த சிறுகதைப் படைப்பிலக்கியவாதியான ஒலிவர் குணசேகர் சங்கமணியின் ஆசிரியர் பொறுப்பை ஏற்றார். இவர் "மலாய் மெயில்" என்ற ஆங்கிலப் பத்திரிகையில் பணியாற்றியவராவார். இவரைத் தொடர்ந்து கவிதைத் துறையில் பல படைப்புகளைக் கொண்ட கவிஞர் சங்கு சண்முகம் 1964இல் பொறுப்பேற்றுக் கொண்டு இன்றுவரை சங்கமணியின் பொறுப்பாசிரியராக இருந்து வருகின்றார்.

சங்கமணியில் அச்சேறும் அங்கங்கள் என்று ஆராய்வோமானால் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் நடவடிக்கைகள் பற்றிய செய்திகளைத் தவிர்த்து நாட்டு நடப்புக்களைப் பற்றிய பொதுவான செய்திகள், இந்திய அரசியல் கண்ணோட்டச் செய்திகள், தமிழ்த் திரையுலகச் செய்திகள், மருத்துவக் குறிப்புகள், சமையல் குறிப்புகள், சிறு கதைகள், கவிதைகள், கட்டுரைகள், பிரயாணக் கட்டுரைகள், கேள்வி — பதில் போன்ற பல்வேறு அங்கங்களைக் காணலாம். இவ்வங்கங்களைப் பயன்படுத்திக் கொண்டு ஏராளமானவர்கள் இலக்கிய உலகினை எட்டிப் பிடித்து, பின்னர் மிகச் சிறந்த எழுத்தாளர்களாக உருவாகியிருக்கிறார்கள். மலேசியத் தமிழ் நாடகத் துறையில் புகழ் பெற்று விளங்கியவர்களில் ஒருவரான சீ. கோனின் ஏராள படைப்புகள் சங்கமணியில் வெளிவந்திருக்கின்றன. சிறந்த கவிஞர்களாகவும், சிறுகதை மற்றும் நாவல் படைக்கும் படைப்பிலக்கியவாதிகளாகவும் விளங்கிய, விளங்கி வருகின்ற கவிஞர் கா. பெருமாள், சா.ஆ. அன்பானநதன், சை. பீர்முகமது, ரெ. சண்முகம், சரஸ்வதி அரிகிருஷ்ணன், சங்கு சண்முகம், கோவி. பெருமாள், மா. பூ. சோழன் போன்றவர்களும் இன்னும் பலரும் சங்கமணியைத் தங்களது எழுத்தாற்றலை வளர்க்கும் பயிற்சிக் களமாகக் கொண்டனர்.

சங்கமணியில் இடம் பெற்ற சிறுகதைகளை எடுத்துக் கொள்வோமானால், பிற்காலத்தில் மலேசியத் தமிழ்ச் சிறுகதைகள் பல்வேறு கருப்பொருள்களைக் கொண்ட சிறுகதைகளாக வெளிவர முன்னோடியாக விளங்கியிருப்பதைக் காண முடிகின்றது. புகழ் பெற்ற எழுத்தாளர்களான மார்க்ட் வைன், ஓ. ஹென்றி போன்றவர்களின் கதைகளை மொழி பெயர்த்து வெளியிட்டுப் புதிய எழுத்தாளர்களின் எழுத்தாற்றலை வளர்க்க வாய்ப்பையும் சங்கமணி வழங்கியிருக்கின்றது. அதனோடு நில்லாமல் இலக்கிய வாதிகளின் வரலாறு, வாழ்க்கைப் போராட்டங்களைப் பற்றியும் கட்டுரைகளை வெளியிட்டுத் தோட்டப்புறத்தைச் சேர்ந்த எழுத்தாளர்கள் ஊக்குவிக்கப்பட்டுள்ளனர். உதாரணமாகச் "சிறுகதை எழுதுவதில் சிறந்தவன் ஓ ஹென்றி" (26-10-1962) என்ற கட்டுரையையும், "ஏழ்மையிலிருந்து உயர்ந்தவர் எழுத்துலக மேதை பெர்னாட்ஷா" (13-10-1961) என்ற கட்டுரையையும் குறிப்பிடலாம். இதில் பெர்னாட் ஷாவைப் பற்றிய கட்டுரைக்கு ஆசிரியர் பின்வருமாறு அணிந்துரை வழங்கியிருக்கின்றார்.

> "பாட்டாளியின் மகன் பாட்டாளியாகவே வாழ்ந்து மடிய வேண்டும் என்னும் "கண்மூடிக் கொள்கை" முதலில் மடிந்தொழிய வேண்டும் என்னும் கருத்தை அடிப்படையாகக் கொண்டு வளர்ந்து வருவது நமது தொழிற்சங்க ஸ்தாபனம். அதில் பங்கு பெற்று அயராது பாடுபட்டு வரும் தொழிலாளர், தாமும் தமது பிள்ளைகளும் தினமும் முன்னேற வேண்டும்; வாழ்வில் ஒரு புகழ் இடத்தைத் தேடிக்கொள்ள வேண்டும், என்று சதா சிந்தித்து முன்னேற வழிகோலும் பிறர் வாழ்க்கை வரலாறுகளைப் படித்தல் மிக அவசியம்.
> சலிப்பு, தாழ்வு மனப்பான்மை, நம்மால் ஆகுமா? என்பவை நம்மை அண்டவிடாமல் காக்கும் இவ்வீர வரலாறுகளைப் பாட்டாளிகள் படித்துப் பயன் அடைய வேண்டும். ஏழையாகப் பிறந்து, வயிற்றுப் பிழைப்புக்காக எழுதி, தோல்வி மேல் தோல்வி கண்டும் ஆனால் விடா முயற்சியின் காரணமாக வாழ்வில் மங்காப் புகழ் தேடிக் கொண்ட பெர்னாட் ஷாவின் வாழ்க்கை வரலாற்றை இவ்வாரம் காண்போம்."

இதன் மூலம் தோட்டப்புறத்தைச் சேர்ந்த எழுத்தாளர்களின் முன்னேற்றத்திற்காகச் சங்கமணி ஆற்றிய பணிகளை அறிய முடிகின்றது. மேலும், சங்கமணியில் வெளிவரும் சிறுகதைகளை ஆராய்வோமானால், பெரும்பாலும் தோட்டப்புறச் சமுதாயத்தைப் பின்னணியாகக் கொண்டு அவர்களது அன்றாட வாழ்க்கைப் பிரச்சனையை அலசி ஆராயும் கதைகளையே பெரும்பாலும் காண முடிகின்றது. இச்சிறுகதைகள், காதல், சாதிப் பிரச்சினைகள், குடும்ப

பிரச்சினைகள், ஏழ்மை, கிராணியார் மற்றும் கங்காணி களின் கொடுமைகள், கட்டாயக் கல்யாணம், தொழிற்சங்கத்திஞல் வரும் நன்மைகள், தனி மனித உணர்வுகள் போன்றவற்றைக் கருப்பொருள்களாகக் கொண்டவை. இவற்றில் பெரும்பாலாவை ஆரம்ப எழுத்தாளர்களால் எழுதப்பட்டிருப்பதால் சிறு கதைகள் அதன் அமைப்பு முறையில் பாதிக்கப் பட்டிருக்கின்றன. ஆனுல் இக்கதைகள் சிறுகதை யின் மற்றக் கூறுகளான பின்னணிக்கும், கதைச் சம்பவங்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்து எழு தப்பட்டிருக்கின்றன. பொதுவாகச் சிறுகதைகளில் சம்சு அல்லது சாராயம், கள் போன்ற மது வகைகளைக் குடிப்பதால் ஏற்படும் குடும்பச் சீரழிவினை விளக்கும் சிறுகதைகள் பெருமளவில் இடம் பெற்றிருக்கின்றன. "தெய்வம் சிரித்தது" என்ற சிறுகதையில் சா. ஞானபண்டிதன் பின்வருமாறு ஒரு குடிகாரனை அறிமுகப்படுத்து கின்ருர்:—

> "நான் குடிச்சிட்டுப் பேசலே, நல்லாத்தான் பேசறேன். ஏன் சிரிக்கிறீங்க? தமிழனுக்குத் தமிழன் என்ன செய்ய முடியும்? இந்த நாட்டுக்கு நான் வந்து பதினைந்து வருஷமாச்சு, நான் கித்தாத் தோட்டத்திலே, கித்தா வெட்டுகிறேன். எனக்கு யாரும் ஒரு செண்டு கூட உதவி செய்ய வேணும்... "ரோட்டிலே நின்றுகொண்டு போக்குவரத்துக்கு இடைஞ் சல் செய்து கொண்டிருந்த செல்லப்பன், ராமா எஸ்டேட்டில் பால் வெட்டில் தொழிலாளி யாக வேலை செய்து கொண்டிருந்தான்..."

இதன் மூலம் மதுப் பழக்கத்திற்கு அடிமையாகிப் போனவர்கள் சமுதாயத்திற்கே தலைகுனிவை ஏற் படுத்தி வைப்பதை ஆசிரியர் சித்தரிக்கின்ருர். அதே வேளையில் இக்கொடிய மதுப் பழக்கத்திலிருந்து விடுபட்ட குடும்பம் ஒரு மகிழ்ச்சிகரமான குடும்ப மாக மாறியதை, கே. பி. முத்தமிழ்ச்செல்வனின், "அன்பின் பரிசு" என்ற சிறுகதையில் காண முடிகின்றது. அந்தக் குடும்பத்தின் தலைவன் தனது மதுப்பழக்கத்தை விட்டுவிட்ட ஓராண்டு நிறைவு நாளைக் கொண்டாடும் விதத்தினை பின்வருமாறு விவரிக்கின்ருர் ஆசிரியர்,

> "...நான் உனக்கு ஒரு பரிசு வாங்கி வந்திருக் கிறேன் என்னென்னு சொல்லு பார்ப்போம். "நீங்களாவது பரிசாவது என்ன விளையாடு றீங்களா? "அட இல்லே மருதி! நெச மாத்தான் சொல்றேன். நான் குடியை விட்டு இன்ரேடு ஒரு வருஷமாகுது இல்லே தினமும் "சம்சு" குடிக்கிற காசை மிச்சப் படுத்தி அந்தப் பணத்துலே என் குடும்ப விளக்கான உனக்கு ஒரு தங்கச் சங்கிலி வாங்கி வந்திருக்கிறேன், பாத்தியா?" "ரொம்ப நல்லாருக்கு இப்படி கொடுங்க" அதுதான் முடியாது. இப்படித் திரும்பு நானே உன் கழுத்துலே போடறேன்" அவள் திரும்பிஞள். பண்பான மனைவிக்கு தன் அன்புப் பரிசான தங்கச் சங்கிலியை அணிவித்தான் முனியன்......"

இக்குடிப்பிரச்சினையைத் தவிர்த்து தோட்டப்புறங் களுக்கே சொந்தமான மேற்குறிப்பிட்ட மற்றக் கருப்பொருள்களிலும் சிறுகதைகளை வெளியிட்டு எழுத்தாளர்களை ஊக்குவிப்பதுடன், சமுதாய முன்னேற்றத்திற்கு நல்ல கருத்துகளை வழங்கு வதிலும் சங்கமணி தனது பணியினை நல்ல முறை யில் செய்து வருகின்றது.

சிறுகதைகளைத் தவிர்த்துப் பயணக் கட்டுரை இலக்கிய வளர்ச்சிக்குச் சங்கமணி மிகச் சிறந்த சேவையை வழங்கியிருக்கின்றது என்று கூறிஞல் மிகையாகாது. பெரும்பாலும் மலேசிய இதழ் களில் பயணக் கட்டுரைகள் வெளிவருவது மிகக் குறைவு. இதுவரையில் வெளிவந்ததில் இ. ஜே. ஜோன்சனின் "கிழக்கும் மேற்கும்", ஏ. சண்முகத் தின் "போபாலில் கபீ கபீ", விவேகானந்தனின் "அஜாந்தா அழைக்கின்றது" என்ற பயணக் கட் டுரை நூல்களே குறிப்பிடத்தக்கதாகும். இம் மூன்றில் அடங்காத மற்ருெரு குறிப்பிடத்தக்க சிறந்த நூல் தேசியத் தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் தேசியத் தலைவராக இருந்த செனட்டர் எஸ். பி. எஸ். நாதன் எழுதிய "நாதன் கண்ட நாடுகள்" என்ற புத்தகமாகும். இந்நூல் வெளி வரும் முன்னர் தொடர்க் கட்டுரையாகச் சங்க மணியில் வெளிவந்தது. பொதுவாகத் தொழிற் சங்கத் தலைவர்கள் மற்றும் உறுப்பினர்கள் அவ் வப்போது பேராளர்களாக வெளிநாடுகளில் நடை பெறும் தொழிற்சங்கக் கூட்டங்களுக்குச் சென்ற வேளைகளில் ஏற்பட்ட பயண அனுபவங்களைப் பயணக் கட்டுரைகளாகச் சங்கமணியில் எழுதி மற்ற அங்கத்தினர்களுடன் பகிர்ந்து கொள்கின்ற னர். இப்பயணக் கட்டுரை அங்கம் வெளி நாட்டிற்குப் பயணம் மேற்கொண்ட ஒவ்வொரு சங்க உறுப்பினருக்கும் பயண அனுபவங்களை எழுதும் ஆர்வத்தை தூண்டும் ஒரு கருவியாக அமைந்தது என்ருல் அது மிகையாகாது. ஆனுல் செனட்டர் நாதனின் கட்டுரைகள் போன்று மற்றக் கட்டுரை கள் நூல் வடிவம் பெறவில்லை. மற்றக் கட்டுரை களும் நூல் வடிவம் பெற்றிருக்குமாஞல், மலேசி யத் தமிழ் இலக்கிய உலகிற்கும் பயணக் கட்டுரை இலக்கியத்தின் வளர்ச்சிக்கும் சிறந்த பங்காக அமைந்திருக்கும் என்பது வெள்ளிடைமலை.

மேலும், சங்கமணியில், தோட்டத்து வம்பு

என்று தலைப்பிட்டுப் பேச்சுத் தமிழிலே சுங்கை சிப்புட்டைச் சேர்ந்த சிங்காரவேலன், சிங்கலன் என்ற பெயரில் எழுதி வந்த தொடர் கட்டுரைகள் வட்டார இலக்கியத் தன்மையுடன் சிறந்த கட்டுரைகளாக விளங்குகின்றன. இக்கட்டுரைகளின் வழி தோட்டத்திலே நடந்து வந்த ஒரு சில கொடுமைகளைப் பலர் அறிய முடிந்தது. நாடு சுதந்திரம் பெற்ற பிறகும், தொழிற்சங்கம் தனது பலத்தினைப் பெருக்கித் தொழிலாளருக்கு நன்மதிப்பைப் போராடி பெற்றுக் கொடுத்த பின்னரும் கூடச் சமூகக் கட்டுப்பாடுகள் என்ற போர்வையில் தொழிலாளர்களைக் கேவலமாக நடத்தக்கூடிய பண்பு கெட்ட மனிதர்கள் இருக்கவே செய்தனர் என்பதை இக்கட்டுரைகள் வெளிச்சம் போட்டுக் காட்டின. "வரட்டும் துரை" என்ற கட்டுரையில் ஒரு கங்காணியின் சுயநலப் போக்கினைப் பின் வருமாறு வெளிப்படுத்தியிருக்கின்றார்.

"......சொல்லுகிறேன் கேளு கங்காணிக்கிப் பண ஆசை புடிச்சுப் போயி, நாலு மாசத்துக்கு முன்னே, தன்னோட பெண்டாட்டிக்கி, மரம் வெட்டு வேலே தொரையக் கேட்டு வாங்கிக் குடுத்துருக்காரு. அந்தப் பொம்பளைக்கி மரம் வெட்டி அனுபவம் இல்லே. புதிய பழக்கம் போல இருக்கு. அது கன்னு பின்னுன்னு மரத்துலெ காயம் போட்டு வெட்டியிருக்கு. அது தொரைக்கித் தெரிஞ்சி போனாச் சங்கடமுன்னு ஒடனே கங்காணி, பேச்சியெ மாத்தி அந்த நெரையிலெ போட்டு பேச்சி வெட்டுன நிரையிலெ தன்னோட பெண்டாட்டியெப் போட்டுட்டாரு. ஒன்னும் தெரியாத அப்பாவி பேச்சி, கங்காணி சொன்னதைக் கேட்டுட்டு கங்காணி பெண்டாட்டி வெட்டுன நெரையிலெ, ஒரு பதினஞ்சு நாளா வெட்டிக்கிட்டு வந்திருக்கு. பேச்சியப் புடிச்ச பொல்லாத காலம் தொரை ஒரு நாளு தீம்பாருக்கு போனவரு, பேச்சி வெட்டிக்கிட்டு இருந்த மரத்தெ எல்லாம் பார்த்துட்டு ஆபிசுக்கு வந்து கங்காணியெக் கூப்புட்டு அந்தப் பொம்புளைக்கி வேலே கொடுக்க வேணாமுன்னு சொல்லிவிட்டாராம். அப்பவாச்சும் கங்காணி உள்ளதைச் சொன்னாரா தொரைக்கிட்டே? இல்லே உள்ள வெசயத்தெ தொரைக்கிட்டெ சொல்லாமே, பேச்சி கிட்டே வந்து நாளியிலேருந்து மரம் வெட்டு வேலே ஒனக்கு கொடுக்க வேணாமுன்னு தொரை சொல்லிட்டாரு. நீ வெளிக்காட்டு வேலைக்கு போரதா இருந்தா சொல்லு. நான் தொரையைக் கேட்டு வந்து சொல்லுறேன்னு சொல்லிட்டும் போய்ட்டாராம். எப்படி இருக்கப்பா கங்காணியோட கயவாளித்தனம்? ......"

இக்கட்டுரையின் மூலம் ஒரு சில தோட்டங்களில் கங்காணிகள் தொழிலாளர்களுக்குச் செய்யும் கொடுமைகளை அறிய முடிகின்றது. தோட்டத் தொழிலாளர்கள் பெரும்பாலும் அடக்கு முறை வாழ்க்கையையே அறிந்திருப்பதனால் அவர்களது பலவீனங்களைப் பயன்படுத்திக் கொள்ளும் கும்பல்கள் தொடர்ந்து இருக்கவே செய்தன என்பதற்குச் சிங்காரவேலனின் இக்கட்டுரை சான்றாக அமைகின்றது. கங்காணிகளை விட, தன் இனத் தொழிலாளர்களை இழிவுபடுத்திச் சுகம் காண்பதில் தோட்டத்துக் கிராணிமார்கள் ஒரு படி உயர்ந்தே உள்ளனர் என்பதை சிங்கலனின் மற்றொரு கட்டுரையான "நாற்காலிச் சண்டை" என்ற கட்டுரையில் காண முடிகிறது.

"........இன்னும் புரிஞ்சிக்கிலியா நீங்க! அய்யாமாருங்களோட பாட்டாளிங்க ஒக்காந்திருந்தா, அய்யாமாருங்களுக்கு மதிப்புக் கொறஞ்சு போவுமாம். அதுக்காவத்தான், இப்ப, நடந்த சண்டே" நாங்க போயி ஒக்காந்ததும், எங்களெ மொறைக்க பாத்தாங்க. அப்பறம், "ஒங்களுக்கு இடம் வெளியிலே இருக்கு. அங்கே போயி ஒக்காருங்க. இதுக்கு வேறெ ஆளு வரும் போங்கடா"ன்னாரு, நான் சொன்னேன். ஆளுங்க வரும் போது, நாங்க எழுந்திரிச்சுப் போயிடுறோ" முன்னு சொன்னேன். அதுக்கு வாத்தி சொன்னாரு "அவனுங்களுக்கு மரியாதையாச் சொன்னா, கேக்க மாட்டானுங்க" இன்னாரு... ஒடனே கிராணி எந்திரிச்சி "என்னடா வெட்டிப்பசங்களா! ஒங்களுக்கு இங்க ஒக்கார யாருடா அதிகாரம் குடுத்தது? நாங்க யாருன்னு தெரியுதா இல்லியான்னாரு ................"

இதன் மூலம் கிராணிகளும், தோட்டத்து தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களும் தோட்டத் தொழிலாளர்களை நாற்காலியில் அமர்வதற்குக் கூட அனுமதிக்கவில்லை என்கின்ற உண்மை வெளிப்படுகின்றது. சாதாரணத் தொழிலாளர்களை அந்தஸ்து என்கின்ற சமூகக் கட்டுப்பாடுகளை உருவாக்கி அடிமைகள் போல நடத்தித் தோட்டப்புறத்திலே முடங்கிக் கிடக்கச் செய்திருக்கின்றனர். இம்மாதிரியான அடக்கு முறைகளை இம்மாதிரியான கட்டுரைகள் மூலம் வெளிப்படுத்தி தோட்டப்புறச் சமுதாயத்தில் மறுமலர்ச்சியையும் முன்னேற்றத்தையும் ஏற்படுத்த சங்கமணி முயன்றிருப்பதைக் காண முடிகிறது.

இதைத் தவிர்த்து, சங்கமணி தனது இலக்கியச் சேவையாக குறுநாவல்களை வெளியிட்டு இருக்கின்றது. இவை சங்கமணியிலே தொடராக

www.padippakam.com

வெளியிடாமல், முப்பது பக்கங்கள் என்ற அளவில் சிறு புத்தகமாக சங்கமணியுடன் இணைத்து வெளியிடப்பட்டிருக்கின்றன. இக் குறுநாவல்கள் பொதுவாகத் தோட்டப்புறச் சமுதாயத்தை பின்னணியாகக் கொண்டு அன்றாட வாழ்க்கைப் பிரச்சினை மற்றும் தொழிற்சங்கத்தினால் அவர்கள் அடையும் பயன்கள் என்ற கருப்பொருள்களைக் கொண்டு படைக்கப்பட்டுள்ளன. இக்குறுநாவல்கள் வரிசையில் வெளிவந்த நூல்கள் ஏறக்குறைய பன்னிரண்டு மட்டுமே என்று அறிய முடிகின்றது. இவற்றில், "மண்ணும் மழையும்", "வெள்ளம் பள்ளத்தை நோக்கிப் பாய்கிறது", "தைப்பூசம்" "அலையோசை" போன்ற குறுநாவல்கள் குறிப்பிடத்தக்கதாகும். இவ்வாறு வெளிவந்த குறுநாவல்களைச் சங்கமணியின் பொறுப்பாசிரியராக விளங்கும் சங்கு சண்முகமே படைத்திருக்கின்றார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். ஆனால் இம் முயற்சி மிகக் குறுகியக் காலக் கட்டத்திலேயே கைவிடப்பட்டது, மலேசியத் தமிழ் நாவலுலகிற்குப் பேரிழப்பு என்றே கூற வேண்டும். இதற்குப் பின்னர்ச் சங்கமணி நாவல் வெளியிடுவதில் ஆர்வம் கொள்ளவில்லை. அது தனது கவனத்தினைச் சிறுகதையுடன் நிறுத்திக் கொண்டது.

தொடர்ந்து, சங்கமணியின் இலக்கியப் பணியை விடுத்து மற்றப் பணிகளை ஆராய்வோமானால், தோட்டப்புறச் சமுதாயத்துடன மிக அணுக்கமாக அவர்களது அன்றாட வாழ்க்கையில் நிகழும் நிகழ்ச்சிகளுக்கும் சங்கமணி பெரும் பங்காற்றியிருப்பதை அறிய முடிகின்றது. ஐம்பதுகள் மற்றும் அறுபதுகளின் முற்பகுதியில் காணாமல் போனவர்களைப் பற்றி அவரவர் குடும்பங்களைச் சார்ந்தோர் கொடுத்த அறிக்கைகள் ஏராளமாக வெளிவந்திருக்கின்றன. அது மட்டுமின்றி, இந்நாட்டிலிருந்து தமிழ் நாட்டிற்குத் திரும்புவோரைப் பற்றிய விவரங்கள் மற்றும் அவர்களுக்கு வைக்கப்படும் விருந்துகள் பற்றிய செய்திகளும் இடம் பெற்றிருக்கின்றன. சில தோட்டங்களில் தங்களது பணிகளை முடித்துக் கொண்டு ஓய்வு பெற்று இங்கிலாந்து திரும்பும் தோட்டத் துரைமார்களுக்குச் செய்யப்பட்ட வழியனுப்பு விருந்து உபசரிப்புகள் பற்றிய செய்திகளும் வெளி வந்துள்ளன. இதைத் தவிர்த்து திருமணம், பிறந்த தினம், மரணம், கருமக்கிரியைகள் மற்றும் திவசங்கள் பற்றிய அறிவிப்புகளும் இடம் பெற்றுள்ளன. அதனுடன் அந்நாளில் தோட்டத் திருவிழாக்களில் தமிழ்த் திரைப்படம் காண்பிப்பதுடன் நாடகம் அரங்கேற்றப்பட்டதையும் பி. ஆர். இராமையா என்பவர் தங்கள் தோட்டத்தில் நடந்த திருவிழாப் பற்றி எழுதிய செய்தியிலிருந்து அறிய முடிகின்றது.

> "கடந்த 11-4-1961இல் காளியம்மன் திருவிழாவை முன்னிட்டு, பத்துகேவ்ஸ் திரு. ஆர். சுப்ரமணியம் (ஆசிரியர்) எழுதிய கோதண்டராமன் என்னும் நகைச்சுவை நாடகம் பொதுமக்கள் ஆதரவில் 10-4-61இல் இரவு மணி 8.00க்கு நடைபெற்றது......"

இந்த வகையில் இந்நாட்டுத் தமிழ் நாடக வளர்ச்சிக்குத் தோட்டப்புற மக்கள் பெருமளவில் ஆதரவு அளித்துள்ளனர் என்பது தெரிய வருகின்றது.

இவ்வாறாக, ஐம்பதுகளில் ஆரம்பிக்கப்பட்ட சங்கமணி ஒரு தொழிற்சங்க ஏடாக இருப்பினும் மலேசிய தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க அளவிற்கு அரும் பணியாற்றி வருகின்றது என்று கூறினால் அது மறுக்கவியலாததாகும். மேலும் சங்கமணி தமிழில் மட்டுமல்லாமல் மற்றொரு இந்திய மொழியாகிய தெலுங்கிலும் கையெழுத்துப் பிரதியாக வெளிவருகின்றது. ஆனால் இதில் தொழிற்சங்கத்தைப் பற்றிய செய்திகள் மட்டுமே இடம் பெற்று வருகின்றன. தொடர்ந்து, தோட்டப்புறச் சமுதாயத்தினர் இடையே படிக்கும் ஆர்வத்தை வளர்த்ததுடன் பலரை எழுத்துலகிற்கு அறிமுகப்படுத்தி எழுத்தாளர்களாக்கிய பெருமையும் சங்கமணிக்கு என்றும் நிலைத்து நிற்கும். மேலும் சங்கமணி தொடர்ந்து, இந்த நாட்டுத் தமிழர்களில் ஏறக்குறைய எண்பது சதவிகிதத்தினரைப் பிரதிநிதிக்கும் தோட்டப்புறச் சமுதாயத்தின் குரலாக விளங்குவதுடன் மலேசியத் தமிழ் இலக்கிய உலகிற்கு தனது பணியை வழங்கும் என்பதும் நிச்சயம்.

துணை நூல்கள்:


1) சங்கமணி பத்திரிகைகள்.

2) டாக்டர் இரா. தண்டாயுதம், கட்டுரை: ஒரு நூற்றாண்டு கால மலேசியத் தமிழ்ப் பத்திரிகைகளும் தமிழ் இலக்கியமும்.

3) Rama Subbiah, Tamil Malaysiana, Universiti Malaya,

4) Subramaniam, A Critical Study of Malaysian Tamil shor stories, 1930-1979, Universiti Malaya, 1980.

5) Safian Hussain, Mohd Thani Ahmad, Johan Jaffar, Sejarah Kesusasteraan Melayu, Jilid 1, Dewan Bahasa dan Pustaka, Kuala Lumpur 1981. ●



படிப்பகம்

# மலேசியாவில் புதுக்கவிதை - ஓர் அறிமுகம்

சா. அன்பழகன், பந்திங், மலேசியா

கலை மனித உள்ளத்தின் உணர்ச்சிப் பிழம்புகளுக்குக் கொடுக்கப்படும் அழகு வடிவம். இலக்கியக் கலை, சிற்பக் கலை, ஓவியக் கலை, கட்டிடக் கலை போன்று இன்னும் பலவாய் இதன் கூறுகள் விரிவடைகின்றன. அதனுள் இலக்கியக் கலையே முதன்மையானதாகும். இவ்வகையான இலக்கியக் கலையின் மூத்த முதன்மையான வடிவம்தான் கவிதை இலக்கியம். 19-ஆம் நூற்றாண்டு வரை கவிதை என்றால் யாப்போடு அமைந்ததே என்கிற எண்ணம் இருந்தாலும்,

"பழையன கழிதலும் புதியன புகுதலும்
வழுவில கால வகையினானே"

என்கிற நன்னூலாரின் நூற்பாவிற்கேற்ப, 20ஆம் நூற்றாண்டில் கவிதைத் துறையின் புதிய வரவாக, அதன் பரிணாம வளர்ச்சியாகப் புதுக் கவிதை என்னும் இவ்விலக்கிய வகை கருதப்படுகிறது. இதனால்தான்,

"கால வேகத்தில் கவிதைத் துறையில்
இயல்பாக ஏற்பட்ட ஒரு பரிணாமம் இது"

எனப் புதுக் கவிதையை வர்ணிக்கின்றார் வல்லிக் கண்ணன்.

இத்தகையப் பின்னணியைக் கொண்ட புதுக் கவிதை, தமிழ் இலக்கியத் துறையில் வசன கவிதையாக பாரதியின் மூலம் அறிமுகமாகி, இன்று பல எதிர்ப்புக்களுக்கிடையில் புரட்சிக் கருத்துகளின் புதையலாக இளைஞர்களால் இனங்காட்டப்பட்டு வருகிறது.

"எங்கெல்லாம் நன்மை நலிந்து தீமை செழிக்கிறதோ! அங்கெல்லாம் கவிதை அவதாரம் செல்கிறது. எங்கெல்லாம் குற்றம் கோலோச்சுகிறதோ! அங்கெல்லாம் கவிதை நெற்றிக் கண்களுக்கும் அஞ்சாமல் உண்மைக்காக வாதாடுகிறது"

என்ற அப்துல் ரஹ்மான் குறிப்பதுவும் இதையே உறுதிப்படுத்துகிறது.

இப்படியாக, இலக்கியப் புரட்சியின் புது வடிவமாக, புதுவாய்க்காலாக அமைகின்ற புதுக் கவிதையின் மலேசிய நிலை என்ன? என்பதை அறிமுகம் செய்கின்ற முயற்சியே இச்சிறு கட்டுரையாகும்.

1887ஆம் ஆண்டு சி. ந. சதாசிவ பண்டிதரின் வண்ணையந்தாதி, வண்ணை நகரூஞ்சல், சிங்கை

நகரந்தாதி, சித்திரக் கவிகள் ஆகியவை நூலாக வெளிவந்தன. மூத்தக் குழந்தையாகவும் முதற் குழந்தையாகவும் அமைந்துவிட்ட மலேசியத் தமிழ்க் கவிதையின் புதுக் குழந்தையே புதுக் கவிதை தமிழ் இலக்கிய வரலாற்றில் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதி கவிதைத் துறைக்குப் புதுக்கவிதை இலக்கியத்தைப் பெற்றுத் தந்தது என்றால் மலேசியத் தமிழ் இலக்கிய வரலாற்றில் முதலாம் நூற்றாண்டின் பிற்பகுதியே இப்பெருமையைப் பெற்றுக் கொண்டது.

இந்நாட்டில் எழுதப்பட்ட முதற் புதுக் கவிதை சி. கமலநாதனின் "காலப்படகுகள்" என்னும் தலைப்பிற்குரியதாகும். இஃது 1965ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் அப்போதைய தமிழ் மலர் பத்திரிகையில் வெளிவந்துள்ளது. ஆனாலும், இடைப்பட்ட காலத்தில் இக்கவிதைத் துறையின் வளர்ச்சி வலுப்பெறவில்லை. யாப்பிலக்கணத்தை மீறுகிற இலக்கிய வகை என்பதே இதற்குக் காரணம் எனலாம்.

இந்நிலையில்தான், ஆதிகுமணனை ஆசிரியராகக் கொண்டு தோற்றம் கண்ட "வானம்பாடி" என்னும் வார இதழ் இந்நாட்டில் புதுக் கவிதைத் துறைக்கு ஒரு புதுக்களமாக அமைந்தது. இதன் பிறகே, இந்நாட்டு இளைஞர்களின் இலக்கிய ஊற்றாகப் புதுக்கவிதை பயணப்பட்டது. இப் பயணத்தில் மூத்தவர்களாக சி. கமலநாதன், எம். துரைராஜ், பைரோஜி நாராயணன் ஆகியோர் இருக்க, எம். ஏ. இளஞ்செல்வன், அக்கினி, ஆதி. குமணன், இராஜகுமாரன், சீ. முத்துசாமி, கு. கிருஷ்ணன் போன்ற இளைஞர்கள் புது உத்வேகத்துடன் புதுக்கவிதை என்னும் புத்திலக்கியம் படைக்கத் துணிந்து விட்டனர்.

60களில் தொடங்கிய இக்கவிதைப் பயணத்தில் அன்றைய எண்ணிக்கை (படைப்பிலக்கியமும் படைப்பிலக்கியவாதியும்) சிலவாக இருந்தாலும் இந்நிலை 70களில் மாற்றம் காணத் தொடங்கியது எனலாம். "வானம்பாடி" என்னும் வார இதழின் ஆதரவும் இலக்கணச் செங்கோலும் யாப்புச் சிம்மாசனமும் தேவையில்லாத நிலையில் சுலபமாக எழுதக்கூடியது என்பதையும் எண்ணிக்கையில் பலவாகப் பல்கி பெருகி பலவாகப் பல்கி பெருகிவிட்ட நிலையையே காண்கிறோம்.

"இவை
புதுப் பூக்கள்
காலம் இவற்றை
அடையாளங் காணும்
எதுகைகளும் மோனைகளும்
ஒதுங்கியிருந்தால் போதும்"

(எம். ஏ. இளஞ்செல்வன்)

என்னும் இக்கவிதை வரிகள் இதற்கு ஏற்பட்ட எதிர்ப்பைப் படம் பிடித்துக் காட்டுவதுடன் நில்லாமல் இவை யாப்பிலக்கணத்திற்குக் கட்டுப்படாத கவிதைகள் என்பதையும் நயமாகச் சுட்டுகின்றன. தொடர்ந்து வேறுபல இளைஞர்களும் புத்துணர்வும் பெற்று இவ்விலக்கியப் பயணத்தில் அணிவகுத்தனர். இவர்களுள் மு. அன்புச் செல்வன், துரை, முனியாண்டி, ஏ. எஸ். பிரான்சிஸ், புனஹரன், கனலன், கு. திருநாவுக்கரசு போன்றோரைக் கூறமுடியும்.

மலேசியப் புதுக்கவிதைத் துறையைப் பொறுத்த மட்டிலும் இக்காலகட்டம்தான் மிக முக்கியமான காலகட்டமாகும். 60களிலும் 70களின் முற்பகுதியிலும் எதிர்ப்பையே சந்தித்து வளர்ந்த இக்கவிதைத் துறைக்கு இதன்பிறகு மிகுந்த வரவேற்பு கிட்டியது. இன்று மலேசியாவில் வெளியாகும் அனைத்து நாள், வார மாத இதழ்களும் புதுக்கவிதைக்குக் களம் அமைக்கின்றன என்பதே இதற்கு நல்லதொரு சான்றாகும். மரபுக் கவிஞர்கள் சிலரும் இத்துறையில் கவிதை படைக்க தொடங்கியிருப்பதும் இதன் வளர்ச்சி என்றே குறிப்பிட வேண்டும்.

இதற்கிடையில், 25-8-1979இல் சுங்கைப் பட்டாணியில் நடைபெற்ற "புதுக்கவிதைக் கருத்தரங்கம்" ஒரு திருப்பு முனையாக அமைந்து விட்டது. இதன் பிறகுதான் புற்றீசல் போன்று பலரும் குறிப்பாக இளைஞர்கள் புதுக்கவிதை சமைக்கப் புறப்பட்டு விட்டனர். இந்தப் பயணமே இன்று "படையாக" அணிவகுத்து நிற்கிறது. வே. இராஜேஸ்வரி, கோ. முனியாண்டி, நாகராஜன், சு. முருகையா, த. விஜயநாதன், திரு. முகிலரசன், ஜெக வீரபாண்டியன்,ச. சுந்தரம்பாள் என நீண்டு கொண்டே போகும் அளவிற்குப் புதியவர்களின் வரவும், மலேசியப் பொதுப் பணித்துறை அமைச்சர் டத்தோ ச. சாமிவேலு அவர்களின் பொன் விழாவையொட்டி நடத்தப்பட்ட புதுக் கவிதைப் பரிசுப் போட்டி, மலாயாப் பல்கலைக் கழகத் தமிழ்ப் பேரவை நடத்திய பண்பாடு, இலக்கிய வாரத்தின் "புதுக் கவிதை அரங்கம்" (1987ஆம் ஆண்டு) ஆகியவை இதன் முக்கியத் தொடர்ச்சி எனலாம்.

இத்தகைய பின்னணியும் வளர்ச்சியையும்

கொண்ட மலேசியப் புதுக்கவிதைத் நுறையை அணிசெய்யும் வகையில் இதுவரை 7 நூல்கள் வெளிவந்துள்ளன. அவை முறையே, எம். ஏ. இளஞ் செல்வனின் "நெருப்புப் பூக்கள்" (மே, 1979), "புள்ளிகளைப் புறக்கணிக்கும் புதுக் கோலங்கள்" (ஆகஸ்ட், 1979), தொகுப்பு நூல் டாக்டர் இரா. தண்டாயுதத்தின் "கோலங்கள்" (அக்டோபர் 1979), அக்கினியின் "கனு மகுடங்கள்" (ஜூன் 1984), மற்றும் ஏ. எஸ். பிரான்சிஸின் "ஓரிரவு மலர்கள்" (ஜூலை, 1983), "கல்வெட்டுக்கள் காத்துக் கிடக்கின்றன" (டிசம்பர், 1986), "இளமையும் இறைவனும்" ஆகும். இன்னும் சில நூல்கள் அச்சுக்காகக் காத்துக் கிடக்கின்றன என்பதையும் கூறத்தான் வேண்டும்.

மலேசியத் தமிழ்க் கவிதைப் பூங்காவை அலங்கரிக்கும் இந்நூல்களின் உள்ளடக்கங்கள் உண்மை உணர்வுகளுக்கு, சமகால உள்ளப் பாதிப்புகளுக்குப் போடப்படுகின்ற வடிகாலமாக இருக்கின்றன.

> "தமிழகப் புதுக்கவிதையின் உத்தி, பொருள், சொற்றிறம், அமைப்பு இன்னும் இவர்களுக்கு ஆதாரமாய் இருப்பதாகவே தெரிகிறது. இருப்பினும் சமூகத்தின் மீது காட்டும் தார்மிகக் கோபத்தை இவர்கள் ஒளிவு மறைவின்றிக் கவிதையில் வடிக்கின்றனர் - குறியீடும் – உருவகமும், புராண இதிகாசப் பாத்திரங்கள் மனப் போக்கும், எதிர்மறையான பார்வையும் இவற்றில் அதிகம் விரவுவதைப் பார்க்கலாம்"

என்கிற திரு. பாலபாஸ்கரனின் கருத்தும் இதையே மறு உறுதிப்படுத்துவதாக அமைகிறது.

இந்நாட்களில் அடங்கியிருக்கின்ற புதுக் கவிதைகள் பல்வேறு கோணங்களில் தனிமனித உணர்ச்சிக் கவிதைகாகவும், சமூகப் பிரச்சினைகளான வரதட்சணைக் கொடுமை, கல்வியறிவு குறைந்த நிலை, இந்தியர்களின் பொருளாதார வலுவின்மை, வறுமையின் கோரம், காதலின் இன்ப—துன்ப உணர்வுகள், இயற்கை ஆகிய வற்றை உள்ளடக்கிய கவிதைகளாக அமைந்திருக்கின்றன.

"ஓ சஞ்சிக் கூலிகளின் சந்ததிகளே!" எதை தொடங்கி, இந்தச் சமுதாயத்தின் உழைப்பும், உரிமைக்குரல்களும் உரம் பெறுததை "அனுதாபம்" ஆகச் சுட்டிக்காட்டி,

"உங்கள் மகஜர்கள்
தூங்குமூஞ்சி மரத்தடியில்
கோப்பிக் கடைகளில்
காத்துக் கிடக்கின்ற
பாமரர்களின் கடவுளர்களால்
தயாரிக்கப்பட்ட
உங்கள் மகஜர்கள்
சந்திப்பு அறைகளின்
ஏர்க்கண்டிஸன் குளிரில்
திட்டமிட்ட கைமறதியில்
இமை மூடி நித்திரை போகின்றன...!
என்றாலும்
நீங்கள் சளைக்காமல்
மகஜர் கொடுக்கின்றீர்கள்
நீங்கள்
"மைனரிட்டி" சமுதாயம்
மட்டுமல்ல
மகஜர் கொடுக்கும் சமுதாயமுங்கூட"

(எம்.ஏ. இளஞ்செல்வன் நெருப்புப் பூக்கள்)

என இச்சமுதாயத்தின் இயலாமையையும் அறியாமையையும் அவல நிலைகளாகச் சிந்திக்க வைக்கின்றார், ஆசிரியர். இந்நூலில் இடம்பெற்றிருக்கின்ற மற்ற 26 கவிதைகளும் சமுதாயத்தின் பலவீனங்களையும் பிரச்சினைகளையும் எடுத்து வைக்கின்றன.

துரை முனியாண்டியின்,

"இராவணன்
வழுக்கி விழ
அவள்
வாழைப் பழத்
மேலானள்"

புள்ளிகளைப் புறக்கணிக்கும்
புதுக்கோலங்கள்)

என்பதில் இராம காவியத்தில் இராவணனின் பாத்திரப் படைப்பைச் "சீதை" என்ற தலைப்பின் மூலம் மிக அழகாகச் சித்தரிக்கின்றார்.

இந்தச் சமுதாயத்தின் குடிப்பழக்கத்தை நகைச்சுவையாகச் சுட்டிககாட்டி நலிவைத் தேடும் போக்கை நயப்படுத்திக் காட்டுகின்றார். இத் தொகுப்பு நூலில் இடம் பெற்றுள்ள மற்றொருவர் (வே. இராஜேஸ்வரி):

"அனுதினமும்
அவன்
டிக்கட் வாங்கி
சொர்க்கம் சென்று
பஜனை செய்வதால்;
அவன் குடும்பம்
இலவசமாய்
நரகம்
சென்று வரும்"

www.padippakam.com

எனும் இக்கவிதையின் வழி, குடிகாரனின் தொல்லையால் பாழாகின்ற குடும்பநிலை படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

மரணம், என்று? எப்போது? வரும் என்பது யாருக்கும் தெரியாது. இதைக் கவிஞர் சிந்திக்கின்றார். அச்சிந்தனையை,

"ஏ மரணமே!
வட்டிக்குக் கடன் தந்த
வங்காளியைப் போல், ஏன்
என் பின்னல் சுற்றுகிறாய்"
(ஆதி. குமணன்: புள்ளிகளைப் புறக்கணிக்கும் புதுக்கோலங்கள்)

எனக் கேள்வியோடு உருவகப்படுத்திக் காட்டுகின்றார்.

மொத்தம் 22 கவிநூல்களின் படைப்புகள் சிந்தனைச் சிறபங்களாக சிறகு விரித்துள்ளன.

"ஓரிரவு மலர்கள்" (ஏ. எஸ். பிரான்சிஸ்) எனும் நூலின் கவிதைகள் காதலின் இன்ப—துன்ப உணர்வுகளைப் படம் பிடித்துக் காட்டுவதாக அமைகின்றன.

"கனு மகுடங்கள்" தந்து அக்கினியின் கவிதைகளோ மற்றப் பிரச்னைகளைத் தொட்டுப் பேசுகின்ற அதே வேளையில் அனைத்துலகப் பிரச்சினைக்கும், வடிவம் கண்டிருக்கிறது. அனைத்துலக ரிதியில் வல்லரசுகளுக்கிடையில் ஒற்றுமை நிலவ வேண்டும் என்கிற போக்கில்,

"காலக் கடலில்
வாழ்க்கைப் புயலில்
நாமெல்லாம்
ஒரே படகினில்...
நாம்
ஒருவரையொருவர்
விசுவாசிப்போமாக!
நேசிப்போமாக"

என ஓர் அமைதிப் பிரகடனம் செய்கின்றார். இதைத் தவிர்த்து, பட்டமரம் எனும் தலைப்பில் இலையுதிர் காலத்தில் இருக்கின்ற ஒரு மரத்தின் நிலையை மனித வாழ்வோடு உருவகப்படுத்தி

"அண்டை வீட்டுக்காரிகளெல்லாம்
பூவும் பொட்டுமாய்
குலுக்கி மினுக்க
நீ விதவையாய் நிற்பது
விசனத்தைத் தருகிறதே" எனச்

செழிப்போடு இருக்கின்ற மரங்களை மங்களப் பெண்களுக்கும் பட்டுவிட்ட மரத்தை விதவைப் பெண்களுக்கும் உவமைப்படுத்திச் சமுதாய நிலையை கற்பனையோடு எழுதியிருப்பது சிறப்பாக அமைகிறது.

அடுத்து, கல்வெட்டுக்கள் காத்துக் கிடக்கின்றன" என்கிற மற்றுமொரு புதுக்கவிதை நிலை வெளியிட்டு மலேசியத் தமிழ்ப் புதுக் கவிதைத் துறைக்கு உரம் சேர்த்துள்ளார், திரு. ஏ. எஸ். பிரான்சிஸ். 18 கவிதைகள் கொண்ட இக்கவிதை நூல், அறிவுரையைக் கூறி நம்பிக்கையூட்டும் கதைகளாக இருக்கின்றன. அவற்றுள்,

"பள்ளிக் காலங்களை
பகல் கனவாக்கி விட்டு
அனுபவ காலத்தில்?

என்கிற கவிதை வரிகளின் மூலம் இளமைக்கால கல்வியின் முக்கியத்துவத்தை உணர்த்துகின்றார்.

"புதுக் கவிதை காலத்தின் பரிசு ஒவ்வொரு காலக்கட்டத்திலும் வாழும் மக்களுடைய தேவைகளை அறிந்து, அக்காலக்கட்டத்திற்கு வேண்டிய இலக்கிய வகைகளைக் காலமே படைத்துத் தருகின்றது" என்கிறார் டாக்டர் இரா. தண்டாயுதம். இவ்வகையிலே மலேசியக் கவிதைத் துறையில் புதுக்கவிதைகளைப் படைக்கின்றவர்கள் கையாளுகின்ற உள்ளடக்கங்களும் அமைந்திருக்கின்றன. இதற்கு உதாரணங்களாக இன்றைய சில புதுக்கவிதைகளைக் (பத்திரிகைக் கவிதைகள்) கூறலாம்.

"தாய்க் குலங்கள்
கணவன் என்ற கயவனின்
கைப் பொம்மைகள்
உயிர்ப் பொம்மைகளை
ஊரில் நடமாட விடும் கை சாவிகள்"
(தினமணி: ஏ.எஸ். பிரான்சிஸ்)

எனப் பெண் விடுதலையை விரும்புகின்ற காலகட்டத்தில் தாய்க் நலத்தின் வேதனை நிலையையும்,

"இணை கோடுகளாய்
ஓடுகின்ற தண்டவாளங்கள்
இரும்புத் துண்டுகளா...
இல்லை
எங்கள் எலும்புத் துண்டுகளன்றோ"
(புதிய சமுதாயம்: காசிதாசன்)

எனச் சம உரிமை நிலைநாட்டப்பட வேண்டும் என்று குரல் கொடுக்கப்படுகின்ற காலகட்டத்தில், இந்தியச் சமுதாயத்தின் இறந்த கால இன்னல்களை (இந்நாட்டில் சாலைகளையும் இரயில் பாதைகளையும் போட்ட துன்பக் கதை) படம் பிடித்துக் காட்டுகின்றார். இது போன்றே,

அணு விஞ்ஞானிகளே,
ஹைட்ரஜன் குண்டுக்கு
அதிக சக்தியா
என்பதை ஆராய வேண்டாம்
உலகில் பசியை அழிக்க
ஒரு குண்டு செய்யுங்கள்''
(தினமணி: கிருஷ்ணதாசன்)


எனப் பசிக் கொடுமை தாண்டவமாடுகின்ற காலக் கட்டத்தில் அணு ஆராய்ச்சிக்கு முதன்மைக் கொடுக்கின்ற போக்கைக் கண்டிக்கின்றார், மற்றொருவர்.

இப்படியாக, அந்த அந்தக் காலகட்டத்தின் உணர்ச்சிகளுக்கு, உண்மை உணர்வுகளுக்கு வடிவம் கொடுப்பதாக அமைகின்ற இலக்கியமாகத் திகழ்கிறது, புதுக்கவிதை.

இத்தகைய பின்னணியும் வளர்ச்சியையும் கொண்டிருக்கின்ற புதுக்கவிதைத் துறை, இந்நாட்டில் மேலும் வாழ்வதற்கும் வளர்வதற்கும் வழிகள் நிறைய உள். உரை நடையில், மணிப் பிரவாள நடை, மறுமலர்ச்சி நடை, தனித் தமிழ் நடை, செந்தமிழ் நடை என இருப்பதைப் போன்று கவிதைக்கும் இன்னும் சில தோன்றலாம். அப்படித் தோன்றுகின்ற இலக்கியத்திற்கு காலம் பதில் தந்துவிடும். ஆகவே, புதுக்கவிதை என்பது, இலக்கணத்தை உடைத்தெறிந்து உணர்ச்சியில் நின்று கொண்டு, மேலிருந்து கீழாக எழுதுகின்ற உரை நடை இலக்கியத்தின் புதுப்பிரசுவமாக ஆகிவிடக்கூடாது. அதே வேளையில் புதுக்கவிதை படைக்கின்றவர்கள், தாங்கள் புதுக்கவிதை எழுவதன் மூலம் தமிழ்க் கவிதைத் துறையில் சாதனை புரிகின்றோம் எனக் கொள்ளாது, ஒரு சோதனை செய்கின்றோம் என எண்ணுதல் வேண்டும். இந்த எண்ணம் பிறந்துவிட்டால், காலம் பதில் சொல்லும் என்று முடிவெடுத்தால், மரபுக் கவிதையுடன் போர்த்தொடுக்கும் எண்ணம் மறைந்து போகும். ஆகவே,

''வாமன தரிசனங்கள்
விஸ்வரூபம் கொண்ட பிறகும்
இங்கே பீஷ்ம வியூகம்
கொழுக்க வேண்டாம்
ஒவ்வொரு பேனா முனையும்
பீரங்கிகளாய் வலுக்கட்டும்''
(தமிழ் ஓசை: ஸ்ரீ ரஜினி)

என்கிற கருத்து, மரபுக் கவிதையை/கவிஞர்களைச் சாடுவதில் இருக்காமல், கனமான உள்ளடக்கத்தை உண்டாக்குவதில் இருக்கட்டும் என அறிவுறுத்துகிறது. ●



www.padippakam.com

# தமிழ் மொழி ஆராய்ச்சியில் கணினியின் பங்கு!

எம். அங்கையா, பெர்லிஸ்.

மாந்த வரலாற்றில் சுமார் ஏழாயிரம் ஆண்டுகளாக மனிதன் ஏற்படுத்திக் கொண்டுவிட்ட அறிவியல் தொழில்நுட்ப வளத்தினை விட ஏழாயிரம் மடங்கைக் கடந்த பத்ய்- ஆண்டுகளுக்குள் கணினிகள் (computers) மாந்த குலத்திற்குப் பெற்றுத்தந்துவிட்டன. மாந்த வாழ்வின் அனைத்துத் துறைகளிலும் ஏதோ ஒரு வகையில் நேரடியாகவேனும் அல்லது மறைமுகமாகவேனும் கணினிகளின் தாக்கத்தைப் பார்க்க முடிகின்றது. விரைவில் கணினிகளின் ஆதிக்கமே எல்லாத் துறைகளிலும் மேலோங்கி நிற்கும் நிலை ஏற்படும். அப்பொழுது தமிழர்கள் பின் தங்கிய நிலையில்தான் இருப்பார்கள். இந்த அவல நிலை தவிர்க்கப்படுதல் வேண்டும். ஆகையால் கணினியுடன் தமிழுக்குரிய பரஸ்பரத் தொடர்பை விரைவிலேயே ஆழமாகவும் அழுத்தமாகவும் நிறுவவேண்டிய காலகட்டத்தில் நாம் இருக்கின்றோம். அந்த வகையில் தமிழ் மொழித்துறை ஆராய்ச்சிகளில் கணினியின் பயன்பாட்டைப்பற்றி ஆழமாகச் சிந்திப்பதே இக்கட்டுரையின் முதன்மை நோக்கமாகும்.

0.1 பொதுவாக மொழித் துறை ஆய்வுகளில் பல படிநிலைகளைக் கடைப்பிடிக்க வேண்டியுள்ளது. அவை முறையே, ஆய்வுக்கு எடுத்துக்கொண்ட பொருளுக்குத் தேவையான செய்திக் குறிப்புக்களைச் சேகரித்தல், பின் சேகரித்த குறிப்புக்களை முறைப் படித் தொகுத்தல், பின் பகுப்பாய்வு செய்தல், இறுதியாக முடிவுகளைச் செய்தல். சிறிய அளவில் மேற்கொள்ளப்படும் ஆராய்ச்சிகளுக்கே கூட ஆயிரக் கணக்கில் குறிப்புகளைத் தொகுக்க வேண்டியுள்ளது. அப்படி இருக்க மிகப் பேரளவில் நடத்தப்பெறும் அகரமுதலிகள் மற்றும் சொல்லடைவுகள் தொகுக்கும் பணியில் பல லட்சக்கணக்கான விவரங்களையும் குறிப்புக்களையும் சேகரித்துத் தொகுத்துப் பகுப்பாய்வு செய்ய வேண்டியுள்ளதை ஆய்வாளர்கள் நன்கு அறிவர். இவ்வளவு பெரிய எண்ணிக்கையிலான செய்திக் குறிப்புக்களை நம் நினைவில் இருத்திப் பின்னர் அவற்றை உடனுக்குடன் தெரிவு செய்து வெளிக்கொணர்ந்து பயன்படுத்துவது மனிதனால் இயலாத காரியமாகும். மேலும் மனிதன் ஒரு குறிப்பிட்ட செயலைத் திரும்பத் திரும்பச் செய்

www.padippakam.com

யும் பொழுது அவன் எளிதில் சோர்வு அடைந்துவிடுகின்றான். இதனால் குறிப்பிட்ட பணியைக் குறித்த காலத்தில் செய்து முடிக்காமல் போவதோடு தவறுகள் ஏற்படவும் வாய்ப்புண்டாகின்றது. இந்தக் காரணங்களால் தமிழ் மொழித் துறையில் மேற்கொள்ளப்படும் பெரிய ஆய்வுத் திட்டங்கள் நிறைவுறப் பல ஆண்டுகள் பிடிக்கின்றன.

0.2 ஒரு நொடியில் பத்தாயிரத்தில் ஒரு பங்கு (1/10,000) இடைவெளியில் பல்லாயிரம் பணிகளை மாந்தன் கனவிலும் கருத முடியாத வேகத்திலும் மிகவும் துல்லியமாகவும் செய்து முடிக்கும் ஆற்றலுடன் இற்றைய கணினிகள் திகழ்கின்றன. ஆகவே, கணினியைத் திட்டமிட்டுப் பயன்படுத்தினால் தமிழ் மொழித் துறை ஆராய்ச்சிகளை மிகவும் விரைவுபடுத்திவிட வாய்ப்பு ஏற்படும். இதை மனதில் இறுத்திக்கொண்டு எந்தெந்தத் தமிழ்த் துறை ஆய்வுகளுக்குக் கணினிகளை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளலாம் என்று நுணுகி ஆய்வோம்.

1.0 யாப்பிலக்கண ஆய்வு.

நமக்குக் கிடைத்திருக்கும் பண்டைய தமிழ் இலக்கியங்களில் பெரும்பாலானவை பாடல் இலக்கியங்களாகவே அமைந்திருக்கின்றன. இவ்விலக்கியங்களில் பயின்று வரும் யாப்பிலக்கணத்தை நம்மனோர் கணினியின் துணையுடன் நுணுகி ஆய்வு செய்தால் பல புதிய இலக்கணக் கூறுகளை அடையாளங் கண்டு கொள்ள வாய்ப்பேற்படும். தமிழ்நாடு தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் கணினியின் துணையுடன் திருக்குறளை ஆய்ந்துள்ளனர். திருக்குறட்பாக்களில் கண்டுள்ள சீர்களைக் கண்டறிந்து அவற்றிடையே பயின்றுவரும் தளைகளையும் வகைதொகைப்படுத்தியுள்ளனர். இதேபோல் மற்றச் சங்க இலக்கியங்களின் மேலும் கணினியின் துணையுடன் ஆராய்ச்சிகளை மேற்கொள்ளலாம். இவ்வாராய்ச்சிகளில் கிடைக்கும் புள்ளி விவரங்களைப் பயன்படுத்தினால் புதிய யாப்பிலக்கணத்தையே படைத்துக் கொள்ள வழிபிறக்கும்.

2.0 மொழி இலக்கண ஆய்வு

பழமைக்குப் பழமையாய் புதுமைக்குப் புதுமையாய் விளங்கும் நம் தமிழ் மொழி கிறிஸ்து பிறப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னமேயே இலக்கண வரம்பு கொண்டு வாழ்ந்தது, இன்றும் வாழ்கின்றது. கன்னித் தமிழ் எத்தனையோ நூற்றாண்டுகட்கு முன்னர் வாழ்ந்திருப்பினும் இன்றும் அதிக மாற்றமின்றி வாழும் நிலையில் உள்ளது. டாக்டர் ச. அகத்தியலிங்கம் கருத்துப்படி "சங்ககால இலக்கியங்களில் காணப்படும் தமிழ் மொழிக்கும் கி.பி. ஆறுவது நூற்றாண்டில் தோன்றிய பக்திப் பாடல்களின் தமிழ் மொழிக்குமிடையே பல வேற்றுமைகள் இருப்பது போன்றே கி.பி. பத்தாவது நூற்றாண்டுத் தமிழ் மொழிக்கும் இற்றை வழக்குத் தமிழுக்கும் வேறுபாடுகள் உள. இருப்பினும், "இவ்வேறுபாடுகளெல்லாம் பிற மொழிகளிடையே காணும் வேறுபாட்டை நோக்கின் குறைந்த அளவிலேயே உள்ளன" என்றும் அவர் கருதுகின்றார். இதனால் பல்வேறு காலகட்டங்களில் தமிழ் மொழியில் புதிய இலக்கணக் கூறுகள் தோன்றித் தமிழ் மொழியை வளமாக்கியுள்ளது பெறப்படுகின்றது. அதே போன்று தற்காலப் பேச்சு வழக்கில் பயிலப்படும் இலக்கணக் கூறுகளையும் நுண்ணிதின் ஆய்ந்து பேச்சு மற்றும் எழுத்து வழக்கிற்கென்று முழுமையான இலக்கணம் ஒன்று தமிழுக்கு விரைவிலேயே எழுதப்பட வேண்டியுள்ளதைப் பல மொழியியல் அறிஞர்கள் உணர்ந்து சொல்லி வருகின்றனர். இதை உடனே கணினியின் துணையுடன் செய்து முடிக்க ஆவன செய்ய வேண்டும்.

3.0 மொழிகளின் ஒப்பாய்வு.

ஒப்பீட்டு முறை ஆய்வு ஒரு மொழியின் பல்வேறு நிலைகளையறியத் துணை செய்வதோடு மட்டுமின்றி அதனோடு தொடர்புடைய பல மொழிகளின் இயல்பினையறியவும் துணை செய்கின்றது. இத்தகைய ஆய்வுகளில் சில சமயம் நடுவுநிலை பிறழ்ந்த ஆய்வு முடிவுகள் வெளிப்படுவதும் உண்டு. கணினியின் துணையுடன் இவைபோன்ற ஆய்வுகளை மேற்கொண்டால் உண்மைக்குப் புறம்பான முடிவுகள் செய்யப்படுவதை வெகுவாகக் குறைத்துக்கொள்ள வாய்ப்பு ஏற்படும். மொழிகளில் காணப்படும் இலக்கணக் கூறுகளைக் கணினியில் செலுத்தி விட்டால் போதும், பின் கணினியே மொழிகளுக்கிடையிலான தொடர்புகளைக் கணித்து, அவ்வுறவை அடிப்படையாகக் கொண்டு மொழிகளைத் தனித்தனிக் குடும்பங்களாகப் பிரித்து, ஒவ்வொரு மொழிக் குடும்பத்தையும் ஒப்பிட்டு உறழ்ந்து நோக்கி,



படிப்பகம்

www.padippakam.com

ஒரே குடும்பத்தில் அமையும் கிளை மொழி களுக்கிடையேயுள்ள தொடர்புகளை விளக்க லாம். இவற்றை அடிப்படையாகக் கொண்டு வரலாற்றுக்கு முற்பட்டகால மொழியின் நிலையைப் பற்றிய விளக்கங்களையும், கணினி நமக்குத் தரும். ஆனால் இச்செயற்பாடுகளை எல்லாம் செய்ய முறையான வழியமைப் புக்களை (programmes) கணினிகளுக்குச் சிறப்பாக அமைத்துக் கொள்ள வேண் டும்.

4.0 அடைவுகள் தொகுத்தல்

தமிழ் இலக்கியங்கள் கல்வெட்டுக்கள் மற்றும் செப்பேடுகள் போன்ற வரலாற் றுக் கருவூலங்களின் சொல் தொகுதி விளக்கப் பட்டியல்கள் (concordances) தமிழ் மொழி ஆராய்ச்சியைச் செம்மை யாகச் செய்வதற்குத் தேவைப்படுகின்றன. சொல்/பொருள் அடைவுகளைக் கணினி மிக வும் விரைவாகத் தொகுத்துக் கொடுத்து விடும். தேவையான குறிப்புக்களை உடனுக் குடன் கணினியின் துணையுடன் வெளிப்படுத் திக் கொள்ளலாம். இவை சொற்பிறப்பியல் மற்றும் அகரமுதலித் தொகுப்பாளர்க்குப் பேருதவியாக விளங்கும்.

5.0 புதுச் சொல்லாக்கம்

உலகத்தில் எப்பொழுதும் புதிய புதிய கண்டுபிடிப்புக்களும் கருத்துகளும் தோன் றிய வண்ணமாக இருக்கின்றன. இத்த கைய புதுப்புனைவுகளை நம் தமிழ் மக்க ளுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டுமா னல் நாமும் அவற்றைக் குறிக்கப் புதுப் புதுச் சொற்களை உடனுக்குடன் உரு வாக்கிக் கொள்ள வேண்டியுள்ளது. இது போன்ற விஷயங்களில் கணினியின் பங்கு அளவிடற்கரியது. தமிழ் மொழியில் உள்ள வேர்ச் சொற்கள் அடிச்சொற்கள் மற்றும் முதனிலைச் சொற்களைக் கொண்டு தமிழ் இலக்கண அமைதிக்கேற்ப பல்லாயிரக் கணக்கான சொற்களை நாம் தோற்று விக்க முடியும். இவற்றைச் செய்வதற்குக் கணினியில் சொற்களின் எழுத்துக்களை/ அசைகளை முறைமாற்றிச் சேர்க்கும் வழி யமைப்புக்களின் துணையை நாடலாம். கணினி படைத்துத் தரும் புதுச் சொற் களில் நமக்குத் தேவையானவற்றைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்ள லாம்.

6.0 மொழி பெயர்ப்பு

வேற்று மொழியில் இயற்றப்பட்டுள்ள பல் துறை நூல்கள் எல்லாம் தமிழில் மொழி பெயர்த்து வெளியிட்டால் தான் அத்தகைய அறிவுத்துறைகள் தமிழிலும் தோன்றி வளர வாய்ப்புக்கள் ஏற்படும். கணினியை இத்துறைக்கு நாம் நன்ருகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

7.0 கல்வெட்டு ஆய்வு

தமிழ் நாட்டில் பல ஆயிரக்கணக்கில் கல் வெட்டுகளும் செப்பேடுகளும் கண்டுபிடிக் கப்பட்டிருப்பதை அனைவரும் அறிவோம். ஆனால் இவை முழுமையாகப் படி எடுக் கப்படாமலும் படிக்கப்படாமலும் இருப் பதை அறியும் பொழுது வருத்தமாக இருக்கின்றது. இவற்றில் பொதிந்து கிடக் கும் வரலாற்றுக் குறிப்புகள் எப்பொழுது வெளிப்படுமோ? தெரியாது. கணினியின் துணையின்றி இவற்றை முழுமையாக வெளிக் கொணர்ந்து தமிழ் தமிழர் வரலாற்றை உலகிற்கு உணர்த்த முடியாது.

8.0 தொல்பொருள் ஆய்வு

தமிழ் நாட்டில் முதுமக்கள் தாழிகள் ஆயிரக்கணக்கில் கிடைத்துள்ளன. அவற் றில் சில தாழிகளில் மனித எலும்புக் கூடுகள் நிறைய அகப்படுகின்றன. அந்த எலும்புகளில் குறிப்பாக மண்டை ஓட் டைக் கணினிகளின் துணையோடு மிகவும் துல்லியமாக அளவெடுத்து பண்டைய காலத் தமிழ் மக்களின் உருவம், மூளையின் தன்மை அறிவாற்றல் அவர்களுடைய மொழியின் வளம் போன்ற விவரங்களைக் கணித்தறிய லாம். இது சாத்தியமே என்கின்ருர்கள் சர் ரிச்சர்டு லீக்கி (Sir Richard Leaky) என்ற மானியவியல் அறிஞரின் குழுவினர்.

9.0 மேற் கண்டவாறு நாம் கணினியைத் திட்ட மிட்டுப் பயன்படுத்தினல் தமிழ் மொழித் துறை ஆராய்ச்சிகளை மிகவும் விரைவு படுத்தலாம் என்பது வெள்ளிடை மலையாம்.

# மலேசியாவில் தமிழ் இலக்கியம் வளர்ந்த கதை

அ.மணிசேகரன்

கோலாலம்பூர், மலேசியா.

தமிழ் நாட்டையடுத்துத் தமிழர்கள் குறிப்பிடத்தக்க அளவில் வாழும் நாடுகளாக நாம் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், தென் ஆப்பிரிக்கா, பர்மா, பீஜி தீவு, மொரீஷியஸ் ஆகிய நாடுகளைக் குறிப்பிடலாம். ஆனாலும் தமிழகத்துக்கு வெளியில் தமிழ் இலக்கியம் வளர்ந்துள்ள நாடுகள் எனப் பார்த்தால் நாம் இலங்கை, சிங்கப்பூர், மலேசியா ஆகிய நாடுகளை மட்டுமே குறிப்பிட வேண்டும். இதற்குக் காரணம் இலக்கியம் வளர்வதற்கான வாய்ப்பும், வசதியும், சூழ்நிலையும் இந்த மூன்று நாடுகளில் முழுமையாக இல்லாவிட்டாலும், ஓரளவாவது முறையாக இருப்பதைக் காணலாம்.

தமிழ் நாட்டுக்கு வெளியில் என்றால் சங்க காலத்திலேயே இலங்கையில் தமிழ் இலக்கியம் வளர்ந்துள்ளது என்பதற்குப் பத்துப்பாட்டு, எட்டுத்தொகை ஆகிய நூல்களே போதுமான சான்றுகளை வழங்குகின்றன. அதே சங்க காலத்தில் தமிழ் நாட்டுக்கும் மலேசியா உட்படத் தென் கிழக்காசியாவுக்கும் பலவிதமான தொடர்புகள் இருந்ததாக ஆதாரங்கள் இருந்தாலும்கூட, அதே சங்க காலத்தில் மலேசியாவிலும் இலக்கியம் இருந்ததாக எந்தவொரு ஆதாரமும் இல்லை.

நமது பழங்காலத்து இலக்கியங்களில் "யாவாத்விப்பா, த்விபாந்தரா, சுவர்ணபூமி,. சுவர்ணத்விப்பா, நரிகேலத்விப்பா, கற்பூரத்விப்பா, கதாஹா" போன்ற தென் கிழக்காசிய ஊர்களைக் குறிக்கின்ற பெயர்களும் குறிப்பிடப்பட்டுள்ளதை நாம் காண்கிறோம். ஆனாலும், 2000 ஆண்டுகளுக்கு முன்பே தமிழகத்திற்கும், தென் கிழக்கு ஆசியாவுக்கும் தொடங்கிய தொடர்புகள் கடந்த 19ஆம் நூற்றாண்டுக்குப் பின்னர்தான் இலக்கியம் உருவாவதற்கு வழிவகுத்தன. இவ்வளவு நாட்களாகத் தென் கிழக்கு ஆசியாவோடு தொடர்பு கொண்டிருந்தோர் இலக்கியவாதிகளே அல்லர். அவர்கள் இந்திய ராஜ்யங்களின் ஆட்சியாளர்களும், சமயச் சான்றோர்களும், வணிகர்களும் அகதிகளும் ஆவார்கள். அப்போது இலக்கிய நோக்கத்தோடு எவருமே இங்கு வந்து செல்லவில்லை. வந்தவர்களும் நிரந்தரமாகத் தங்கி இந்திய சமூகத்தை ஏற்படுத்தவுமில்லை.

கி.மு. 3ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இந்தியாவில் பல சிற்றரசர்கள் வாழ்ந்தார்களே தவிர, குறிப்பிட்டதொரு சக்கரவர்த்தி இல்லை. ஆனால் கி. மு. 3ஆம் நூற்றாண்டில் அசோக மனனன் சிற்றரசர்கள் மீது படையெடுக்க அதனையே பின்னர் குப்த மன்னர்களும் செய்தனர். இந்த

www.padippakam.com

நேரத்தில் இந்தியாவின் கிழக்கில் வசித்த அந்தச் சிற்றரசர்கள் தங்கள் ஆதரவாளர்களோடு சேர்ந்து அகதிகளாகக் கிழக்கே கடலைக் கடந்து தென் கிழக்காசியா வந்தார்கள். பின்னர் 1025ல் ராஜேந்திர சோழன் கடாரத்தை வென்று ஆண்டு வந்தான். இது ஆட்சியாளர் கூட்டம்.

தீண்டாமைப் பிரச்சினையின் காரணமாக இந்து சமயச் சான்றோர்கள் நாடு கடந்து தங்கள் சமயத்தைப் போதிக்காமல் இருந்து வந்தனர். ஆனால் 5ஆம் நூற்றாண்டு அளவில் பௌத்த சமயத்தவர்கள் தங்கள் சமயத்தைப் பரப்புவதற்காகத் தென் கிழக்காசியா வந்தபோது அவர்களுக்குப் போட்டியாக இந்து சமயத்தவர்களும் புறப்பட்டார்கள். வாசனைத் திரவியங்களையும், பொன்னையுந் தேடி வணிகர்கள் பன்னெடுங்காலமாகவே வருகிறார்கள். ஆகவே, இலக்கியத்தோடு சம்மந்தமே இல்லாத இந்தியர்களே 19ஆம் நூற்றாண்டுக்கு முன்னர் இங்கு வந்து, நிரந்தரமாகத் தங்காமல் திரும்பி விட்டதனால் இலக்கியம் தோன்றுவதற்கு வழியில்லாமல் போய்விட்டது எனலாம்.

ஆகவே, ஒரு நாட்டில் இலக்கியம் வளர வேண்டுமானால் அங்கே சுயேச்சையாக இயங்கக் கூடிய நிரந்தரமான சமூகம் உருவாக வேண்டும். மலேசியாவைப் பொறுத்த மட்டில் கடந்த 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான் தென் இந்தியர்கள் காப்பித் தோட்டங்கள், கரும்புத் தோட்டங்கள், தென்னந் தோப்புகள், தேயிலைத் தோட்டங்கள், இவற்றைவிட ரப்பர்த் தோட்டங்களிலும், ரயில்வே சாலைகளிலும் வேலை செய்வதற்காக மலேசியா வந்தனர். அவர்களில் பெரும்பாலானோர் கடந்த 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும், அதை விட இந்த 20ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் நிரந்தரமாகத் தங்கத் தொடங்கிவிட்டனர். 1957ஆம் ஆண்டு வரையில் 40 இலட்சம் இந்தியர்கள் வந்து அவர்களில் 28 இலட்சம் இந்தியர்கள் இங்கு எதிர்நோக்கிய பல பிரச்சினைகளின் காரணமாக இந்தியாவுக்குத் திரும்பி விட்டனர். ஆகவே, தமிழர்கள் நிரந்தரமாகத் தங்கத் தொடங்கிய காலம் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில்தான்.

ஆக, நிரந்தரமாகத் தமிழ்ச் சமூகம் இந்நாட்டில் தங்கிவிட்டது. அவர்கள் மத்தியில் தமிழ் இலக்கியம் வளர வேண்டுமாயின் அங்கே முதலில் தமிழ் முறையாகப் புழக்கத்தில் இருப்பதோடு, அம்மொழி கற்கப்பட்டும் வரவேண்டும். அந்த முயற்சியும் கூடச் சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் ஆரம்பமாகிவிட்டது. சென்ற 19ஆம் நூற்றாண்டில் தமிழர்கள் எதிர்நோக்கிய பிரச்சினைகளில் கல்வியும் ஒன்றாக இருந்தது. நமக்குத் தெரிந்த வரையில் கல்வித் துறையில் முதல் முயற்சியை எடுத்துக் கொண்டது கோயில்களே. சமயத்தோடு சேர்ந்தவாறு தமிழ் வளர்க்கப்பட்டது. சுமார் 1950ஆம் ஆண்டு வரையிலும் கூட, கோயில் பூசாரிகளே பல பள்ளிகளில் ஆசிரியர்களாகவும் பணியாற்றினர்.

1816ஆம் ஆண்டில்தான் "பினாங்கு ஃப்ரி ஸ்கூல்" என்ற பெயரில் முதல் தமிழ்ப்பள்ளி தோன்றியது. 1834ஆம் "சிங்கப்பூர் ஃப்ரி ஸ்கூல்", பின்னர் "பிரான்சிஸ் சேவியர் மலபார் ஸ்கூல்", ஆகியவற்றில் தமிழ் வகுப்புகள் நடந்துள்ளன. 1850ஆம் ஆண்டுக்குப் பின்னர் ஆங்கிலமும், தமிழும் கொண்ட பள்ளிகள் தோன்றின. 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கிறிஸ்துவ மடங்கள் மலேசியாவிலும், சிங்கப்பூரிலும் அத்தகைய பள்ளிகளைத் தோற்றுவித்தனர். 1862ஆம் ஆண்டில் "லேடீஸ் பைபிள் டிராக்ட் சொசைட்டி" என்ற கிறிஸ்துவ அமைப்பு தமிழ்ப் பள்ளிகளை நிறுவியது. 1875ஆம் ஆண்டில் செபராங் பிறையில் முதல் தமிழ்ப் பள்ளியைத் தோற்றுவித்தது எஸ். பி. ஜி. என்ற கிறிஸ்துவ இயக்கத்தினர் மட்டுமே. செபராங் பிறை பகுதியில் ஐந்து தமிழ்ப் பள்ளிகளை நிறுவினர்.

இவ்வாறாகக் கோயில்களும், தமிழ்ப் பள்ளிகளும் தமிழை வளர்த்ததோடு, கிறிஸ்துவ மடங்களுடன் அப்பர் அருள் நெறிக் கோட்டம், ராமகிருஷ்ண மடம் போன்ற அமைப்புகளும் தமிழை இங்கு வளர்க்கவே செய்தன. அன்று பெரும்பாலான தமிழ்ப் பள்ளிகள் நகர்ப்புறங்களில் மட்டும் அமைந்திடவே, தோட்டப்புறத் தமிழ் மாணவர்கள் இவற்றை எளிதில் நாட முடியாமல் இருந்தது பெருங் குறையாகவே இருந்தது. தோட்டப் புறங்களில் தமிழ்ப் பள்ளிகள் உதயமானது முதல் கிட்டத்தட்ட 1940ஆம் ஆண்டு வரையில் கூட, கோயில் ஐயர்களும், எழுதத் தெரிந்த சிலரும், தண்டல்மார்களும், படித்த சில பாட்டாளிகளுமே தமிழாசிரியர்களாகப் பணியாற்றியதனால் தமிழ்க் கல்வி பேரளவில் இங்கு வியாபித்திருந்தது.

எனினும், அரசாங்கத் தமிழ்ப் பள்ளி முதன் முதலில் பேரா மாநிலத்தில் உதயமாகிப் பின்னர், கோலாலம்பூர், சிரம்பான் பட்டணங்களில் தோன்றின. 1929ஆம் ஆண்டில் தமிழ்ப் பள்ளிகளை ஒருங்கிணைக்கும் திட்டம் வகுக்கப்பட்டு, 1930ஆம் ஆண்டில் தமிழ்ப் பள்ளிகளின் கண்காணிப்பாளர் நியமிக்கப்பட்டார். 1937ஆம் ஆண்டில் இவர் தமிழ் நாட்டுக்குச் சென்று போதுமான தமிழ்ப் பயிற்சியோடு மலேசியா திரும்பினர். ஆயினும் தமிழ் ஆசிரியர்களுக்குப் பயிற்சி என்பதே இல்

லாமல் போனது. இரண்டாவது உலகப் போருக்குப் பின்தான் தமிழ்க் கல்வி முயற்சி காணத் தொடங்கியது. 1947ஆம் ஆண்டளவில் 7ஆம் வகுப்புப் பயின்றவர்களுக்கு 3 ஆண்டுகள் தமிழாசிரியர் போதனு மொழி வகுப்புகள் நடத்தப்பட்டன.

1955ல் வெளியான ரசாக் அறிக்கையின்படி, எல்லா மலாய்ப் பள்ளிகளும் தேசியப் பள்ளிகளாக மாறி, பிற மொழிப் பள்ளிகள் தேசிய மாதிரிப் பள்ளிகளாக மாறின. இதன் வாயிலாகத்தான், தமிழ்ப் பள்ளி மாணவர்களும் உயர் கல்வியை மேற்கொள்ள இயன்றது. 1957ஆம் ஆண்டில் மலாயா பல்கலைக்கழகம் அமைந்து, அதிலே இந்தியப் பிரிவும் அமையவே, தமிழின் தரம் பல்கலைக்கழகம் வரை உயர்ந்தது. 1969ஆம் ஆண்டில் மொத்தம் 668 தமிழ்ப் பள்ளிகளும், 81,092 மாணவர்களும் இருந்தனர். இப்போது 571 தமிழ்ப் பள்ளிகளும் 90,000 மாணவர்களும் இருக்கின்றனர்.

இப்படியாகத் தமிழ்ப் பள்ளிகள் வளர்ந்த காரணத்தினுல்தான் இங்கே தமிழ் இலக்கியமும் வளர்ந்தது. தமிழ்ப் பள்ளிகளின் பாடங்கள் எல்லாமே தமிழ் நாட்டின் சூழலேயும், இலக்கிய மணத்தையும் தாங்கி இருந்தன. பர்மா, பீஜித் தீவு, தென் ஆப்பிரிக்கா, மொரீஷியஸ் ஆகிய இடங்களில் தமிழர்கள் வாழ்ந்தும், தமிழ்ப் பள்ளிகள் வாழாததனுல் அங்கு இலக்கியம் உருவாகவில்லே. தமிழ்ப் பள்ளிகள் தோன்றியதன் வாயிலாக தமிழைப் படிக்கவும், எழுதவும், பேசவும் இயன்றது. ஆனுல் தமிழறிவு கொண்டோர் தமிழ் இலக்கியத்தை வளர்க்க வேண்டுமானுல் அங்கே எழுத்தாளர் கூட்டமும் தேவை; வாசகர் கூட்டமும் தேவை. எழுதியதை வெளியிடவும், வெளியிட்டதை வாசித்து விமர்சனம் செய்யவும் வாசகர்கள் இருந்தால்தான் தமிழிலக்கியம் வளரும். அவர்களுக்குப் பொதுச் சாதனமாக இருந்து இலக்கியத்தை வளர்க்க உதவுவதில் தலேயாயது தமிழ்ப் பத்திரிகைகளே. தமிழ்ப் பத்திரிகைகளில்தான் எழுத்தாளன் எழுத, வாசகன் விமர்சனம் செய்ய, இலக்கியம் வளர வழி வகுக்கப்படுகிறது.

## பத்திரிகைகள்

மலேசியாவில் இந்தப் பத்திரிகைத் துறை சென்ற 19ஆம் நூற்ருண்டிலேயே நாளேடுகளாகவும், வார, மாத இதழ்களாகவும் தோன்றித் தமிழ் இலக்கிய வளர்ச்சிக்குத் துணே நின்றன. நாளேடுகளில் குறிப்பாக ஞாயிறு மலர்களில் தான் இலக்கிய அம்சங்கள் நிறைந்து காணப்பட்டன. 1876ஆம் ஆண்டில் "தங்கை நேசன்" என்ற பத்திரிகையும், 1877ஆம் ஆண்டில் "உலக நேசன்" என்ற பத்திரிகையும் பினுங்கில் வெளிவந்துள்ளன. இதே காலக்கட்டத்தில் சிங்கப்பூரில் "சிங்கை நேசன்" என்ற பத்திரிகையும் வெளிவந்தது. இவற்றைத் தவிர, "முன்னேற்றம்", "தமிழன்", "தேச வீரன்", "தமிழ் முரசு", "இந்திய மித்திரன்", "தொழிலாளி" போன்ற பத்திரிகைகளும் வெளிவந்து மலேசியாவில் தமிழ் இலக்கியம் வளர்வதற்கு உதவியுள்ளன. 1952இல் 'சோலே' என்ற இதழ் வெளிவந்து 8 திங்கள் வரை நீடித்தது. முதலில் கா. இராமநாதன் அவர்களேயும், பின்னர் தி. சு. சண்முகம் அவர்களேயும் ஆசிரியராகக் கொண்டிருந்தது. 1954இல் சி. ஆர். நரசிம்மராஜ் ஆசிரியராகப் பணி செய்த "புது யுகம்" என்ற வார இதழ் வெளிவந்தது. அதற்கு எம். துரைராஜ் அவர்கள் (இப்போதைய எழுத்தாளர் சங்கத் தலேவர்) பின்னர் ஆசிரியரானுர்.

இவை போக, இன்னும் பல பத்திரிகைகள் வெளிவந்திருக்கலாம். ஆனுல் அவை நீடித்ததாகத் தெரியவில்லே. மாத இதழ்களாகத் "தமிழ்க் கொடி", "சீர்திருத்தம்" போன்ற இதழ்களும் வெளிவந்திருக்கின்றன.

1958இல் தலேநகரில் "தமிழ் ஒளி", "மக்கள் குரல்", "மன ஓசை", "நவரசம்", "தமிழ்த் தொண்டன்" ஆகிய பத்திரிகைகள் தோன்றின. அதே ஆண்டில் சுங்கை பாருவில் "அரசியல் மணி" என்ற பத்திரிகையும், தைப்பிங்கில் "ஆத்ம நண்பன்" என்ற பத்திரிகையும், சுங்கைச் சிப்புட்டில் "மலேநாடு" என்ற பத்திரிகையும், பினுங்கில் "பாரதி" என்ற பத்திரிகையும், பட்டர்வொர்த்தில் "மக்கள் தொண்டன்", "தமிழ்த்தாய்" ஆகிய பத்திரிகைகளும் வெளிவந்துள்ளன. 1959ஆம் ஆண்டிலே தலேநகரில் "வளர்ச்சி" என்ற பத்திரிகையும், ஈப்போவில் "மலேமகள்" என்ற பத்திரிகையும், மெந்தகாப்பில் "அறுசுவை" என்ற பத்திரிகையும், கிள்ளானில் "காவலன்" என்ற பத்திரிகையும், கோலசிலாங்கூரில் "ஆசிரிய தீபம்" என்ற பத்திரிகைகளும் தோன்றின.

1960இல் தலேநகரில் "சிலம்பு", "எதிரொலி", "முத்தமிழ்", "நவமலாயா", ஆகிய பத்திரிகைகளும், பட்டர்வொர்தில் "மக்கள் மன்றம்", "நறுமணம்" ஆகியவையும் குளுவாங்கில் "மக்கள் முரசு" பெட்டாலிங் ஜெயாவில் "மலேமோகினி," பினுங்கில் "நண்பன்", "பாவை", "செந்தமிழ்" ஆகிய பத்திரிகைகள் வந்துள்ளன. 1961இல் ஈப்போவில் "இலச்சியம்", 1962இல் ஜோகூர்பாருவில் "பாசமலர்", பினுங்கில் "தமிழ் மணி," தலேநகரில் தகவல் இலாகாவின் "வெற்றி" ஆகியவை தோன்றின. 1963இல் தலேநகரில் "மாணவர் உலகம்", "அன்னே", "கூட்டுறவு", "முத்தமிழ் இதழ்", "செங்கதிர்", "தாமரை" ஆகிய பத்திரிகைகளும் பெட்டாலிங் ஜெயாவில் "குமரி", கிள்ளானில் "சங்க முழக்கம்"

பத்து அன்னமில் "தமிழ்ப் பூங்கா", ஈப்போவில் "மலைமகள்" ஆகியவை உதயமாயின. இவற்றுள் "மாணவர் உலகம்", "அன்னை" ஆகியவை சிறுவர் இலக்கியத்தைப் படைத்தன. 1964இல் தலைநகரில் "நேர்மைக் குரல்", "தீச்சுடர்" ஆகியவையும், சிகாமட்டில் "மலையரசன்", கிள்ளானில் "காவலன்" பினாங்கில் "தேச பக்தன்" ஆகியவையும் வெளி

1965-ல் தலைநகரில் தேனி தொண்டன் ஆகிய வையும் சிரம்பானில் தேனருவியும் தோன்றின. 1966-ல் தலைநகரில் ஜெய மலேசியா திரைமலர் ஆகியவை தோன்றக் குவாந்தானில் ஜெய பேரிகை தோன்றியது. 1967-ல் தலைநகரில் தன்மானம் எழுத் தாளர் என்ற பத்திரிகைகளும் சுங்கை சிப்புட்டில் மஆநாடு பினாங்கில் பாலை ஈப்போவில் உரிமைக் குரல் ஆகியவை வந்துள்ளன. 1971-ல் தலைநகரில் கலாச்சாரம், 1972ல் தலைநகரில் ஆசிரியர் ஒளி, 1973-ல் தலைநகரில் ஒளி இதயம், 1974-ல் தலைநகரில் எழுத்தாளர் இலக்கிய வட்டம் கலாச்சாரம் ஆகியவையும் பெட்டாலிங் ஜெயாவில் கனகம் என்ற பத்திரிகையும் வந்துள்ளன.

